விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 224 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 14 செவ்வாய்க்கிழமை (30.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவில்லை


# தனித்துப் போட்டியிட பெரமுன தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லையென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

மேலும் பெரமுனவின் வேட்பாளரை மொட்டுச் சின்னத்தில் களமிறக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)



## நாமலுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவிற்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள ▷15

## தேர்தலுக்கு 1.4 பில்லியன் கோரிய தபால் திணைக்களம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் திணைக்களத்தின் செலவினங்களைக் கணித்து, 1.4 பில்லியன் ரூபாய் தேவைப்படுவதற்கான விபரங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ▷15

## கண்டாவளை சமுர்த்தி வங்கியில் பல இலட்சம் ரூபாய் பண மோசடி

### சமுர்த்தி வங்கி செயற்பாடு முடக்கப்பட்டன 4 குழுக்கள் விசாரணைக்காக அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சமுர்த்தி வங்கியில் பல இலட்சம் ரூபாய் பணம் மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சமுர்த்தி உத்தியோகத்தர்களால் குறித்த பணமோசடி இடம்பெற்றுள்ளமை தெரியவந்ததையடுத்து விசாரணைக்காக 4 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கண்டாவளை சமுர்த்தி வங்கிக் ▷15

## தமிழ்ப் பொது வேட்பாளர் இன்று அறிவிக்கப்படலாம்?

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இதுவரை 12 பேர் போட்டியிடுவது உறுதியாகவுள்ள நிலையில் தமிழர்கள் சார்பில் தமிழர்களின் ஒரு மித்த குரலாக ஒலிக்கவுள்ள தமிழ் பொது வேட்பாளர் யார்? என இன்று அறிவிக்கப்படலாம் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது வேட்பாளர், சின்னம், தேர்தல் அறிக்கை ஆகியவற்றை தீர்மானிப்பதற்கு உப கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன. (ம-7)

## முல்லையில் கிணற்றிலிருந்து இளம் குடும்பப் பெண் நேற்று சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நகரப்பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த டெனிஸ்குமார் தெரினா (வயது-30) என்ற இளம் குடும்பப் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த பெண்ணை ▷15

## தமிழர் பகுதியில் இந்துக் கடவுள்களின் விக்கிரகங்கள் சேதமாக்கப்படுகின்றன

### சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(கொழும்பு)

தமிழர் பகுதியில் இந்துக் கடவுள்களின் விக்கிரகங்கள் சேதமாக்கப்படுவதோடு மத சிறுபான்மையினர் இலங்கையில் இலக்கு வைக்கப்படுகின்றனர் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்துக்கள் மற்றும் பிற சிறுபான்மையினர் வழிபாட்டுத்தலங்கள் மற்றும் அது தொடர்பான பகுதிகளிற்கு செல்வதைத் தடுக்கும், மறுக்கும் நடவடிக்கைகளில் இலங்கை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம்சாட்டியுள்ள சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம், அவ்வாறான இடங்களைப் பௌத்த ஸ்தலங்களாக ▷16

## மகப்பேற்று வைத்திய நிபுணர் சரவணபவாவுக்கு யாழ் விருது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழு ஆண்டுதோறும் வழங்கி வருகின்ற உயர் விருதாகிய யாழ் விருது இம்முறை யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் மருத்துவர் ▷16

## சுழிபுரத்தில் கிணற்றில் வீழ்ந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரத்தில் கிணற்றில் விழுந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ▷16

## சந்தேக நபர் மீது தாக்குதல் இரண்டு பருத்தித்துறை பொலிஸார் பணி நீக்கம்

(பருத்தித்துறை)


பருத்தித்துறை பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில், தடுத்து வைத்து சந்தேகநபர் ஒருவரை மூர்க்கத்தனமாக தாக்கிய குற்றச்சாட்டில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர், கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலைய ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் போராட்டம்



வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்று திங்கட்கிழமை தமது அலுவலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த வியாழக்கிழமை அன்று வவுனியா பம்பைமடு பகுதியில் அஸ்வெசும திட்டத்திற்கான பெயர் பதிவுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு வந்த ஒருவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தியமைக்கு கண்டனம் தெரிவித்து இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் , பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

# அரசியல் சித்தாந்தங்களை பின்பற்றினால் மீண்டும் உள்நாட்டு யுத்தம் ஏற்படலாம்

## வஜிர அபேவர்தன எம்.பி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பாரம்பரிய அரசியல் சித்தாந்தங்களை பின்பற்றினால் நாட்டில் மீண்டும் உள்நாட்டு யுத்தம் ஏற்படும் அபாயம் உள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துடன் புதிய பொருளாதார மாற்றச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போதிலும், பாரம்பரிய குறுகிய பிரிவினைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, மக்களை தவறாக வழி நடத்தும் கருத்துக்களை சிலர் முன்வைப்பது வருந்தத்தக்கது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் முன்னைய அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்தப்பட்டதாகவும் அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு வாக்குகளைப் பயன்படுத்துவதா? என்ற கேள்வி எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி இலங்கை மக்கள் முன் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)




# நீதிமன்றத் தீர்ப்பின்படி அரசு செயற்பட வேண்டும்

## பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் தேசிய சமாதானப் பேரவை

தேஷபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றுவதைத் தடுத்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடை உத்தரவு மீதான தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளுமாறு தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தையும் நிலைநிறுத்தி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி அரசாங்கம் செயற்பட வேண்டும் என சபை விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேஷபந்து தென்னக்கோனுக்கு வழங்கிய உயர் நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த மறுப்பதன் மூலம் அரசாங்கத்தின் அலட்சியமும் பொறுப்பற்ற தன்மையும் வெளிப்பட்டு சட்டத்தின் ஆட்சிக்கு நேரடியாக அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

நாட்டின் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை புறக்கணித்து, நீதிமன்ற தீர்ப்பை பின்பற்றாத அரசாங்கத்தின் நடவடிக்கை கவலையளிப்பதாகவும் சட்டத்தை மதிக்கும் குடிமக்கள், பாராளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் புறக்கணிக்கப்படுவதாகவும் குறித்த பேரவை தெரிவித்துள்ளது.

மேலும் இதனால் பொது மக்களின் நம்பிக்கையை இழக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது என்றும் அரசாங்கத்தின் மற்ற மட்டங்களில் உள்ள அதிகாரிகளுக்கு தவறான முன்னுதாரணமாக இது அமைகிறது என்று வாரியம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

# அரச அச்சகத்துக்கு அதியுச்ச பாதுகாப்பு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஆவணங்களை அச்சிடும் அரச அச்சகத்திற்கு நேற்று முதல் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அரச அச்சகத்தின் பாதுகாப்பிற்காக தனி பொலிஸ் நிலையம் அமைக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அரச அச்சகத்தின் பாதுகாப்பு குறித்து ஆராய்வதற்காக பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று அச்சகத்துக்கு சென்றிருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பல ஆவணங்கள் ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சக அதிகாரி திருமதி கங்கானி கல்பனா லியனகே தெரிவித்தார். (ம-7)

# 'நாங்கள் கேட்பது இழப்பீடு அல்ல முறையான நீதி விசாரணையையே'

## திருகோணமலையில் உறவுகள் போராட்டம்

*(திருகோணமலை)*



திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று (29) காலை 9.30 மணியளவில் இடம்பெற்றதுடன் ஆர்ப்பாட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பலர் பங்குபற்றியிருந்தார்கள்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்களுக்கான நீதி வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தியும் சர்வதேச பொறிமுறையை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் "உங்கள் இராணுவத்தை நம்பி கையில் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள்?"

"காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும், அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள்", நாங்கள் கேட்பது இழப்பீடுகளையோ மரணச்சான்றிதழையோ அல்ல முறையான நீதி விசாரணையையே! என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோசங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் இம்மாதம் 24 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1ஆம் திகதிவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கோரி அவர்களின் உறவுகளினால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளுத் தவறணை அமைக்க எதிர்ப்பு
# பல்லவராயன்கட்டு மக்கள் கவனயீர்ப்பு

**(கண்டாவளை)**

**கிளிநொச்சி பூநகரி சின்னப் பல்லவராயன் கட்டு பகுதியில் கள்ளுத்தவறணை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் குறித்த பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனைகளை கட்டுப்படுத்துமாறு கோரியும் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சின்னப் பல்லவராயன் கட்டுப் பகுதியில் கள்ளுத்தவறணை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த பிரதேச மக்கள் நேற்று காலை எதிர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த பிரதேசத்தில் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் குறித்த பிரதேசத்தில் அதிகளவான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் ஏற்கனவே குறித்த கிராமத்தில் போதைப்பொருள்



பாவனையால் கூடுதலான பெண்கள் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் பிரதேச அமைப்புகளால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் தமது பிரதேசத்தில் கள்ளுத்தவறணையை அமைப்பதற்கு எதிராகவும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தைத் தொடர்ந்து பிரதேச செயலாளருக்கான மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக பூநகரி பிரதேச செயலாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது கள்ளுத் தவறணை அமைப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதற்கான அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார். (நி-6-315)

## விலகினார் விஜேயதாச



(கொழும்பு)

தாம் வகித்துவந்த சகல அமைச்சுப் பொறுப்புகளிலிருந்தும் விலகுவதாக அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

தமது பதவி விலகல் தொடர்பான கடிதத்தை தாம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளதாக கொழும்பில் தற்போது இடம்பெற்று வரும் செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார். நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு ஆகிய அமைச்சுப் பொறுப்புகளை விஜேயதாச ராஜபக்ஷ வகித்து வந்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருப்பதாக அவர் அறிவித்திருந்த நிலையில் இந்த பதவி விலகல் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார். (நி-6)

# ஓய்வின்றி உழைத்து ஓய்வுபெறும் உத்தமர்



தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று என்பர் வள்ளுவர். அவர் வாக்குக்கிணங்க புகழ்பூத்த நிற்சிங்கம் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்து தான் பிறந்த நாயன்மார்கட்டு மண்ணுக்கு மட்டுமன்றி இப் பிரதேசத்திற்கே, இதன் அபிவிருத்திக்கே முன்னுரிமை கொடுத்து உழைத்து வந்தவர் தான் இன்று ஓய்வு பெறும் திரு. நிற்சிங்கம் தயானந்தன் அவர்கள்.

### கல்வி

இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், மேல்நிலைக்கல்வியை தொழில்நுட்பக் கல்லூரியிலும் கற்றுத் தேறினார். அத்துடன் நின்று விடாது யாழ்.பல்கலைக்கழக புற நிலைப்படிப்பு அலகினூடாக கிராமிய மேம்பாடு பற்றியும், இதே அலகினுடாக விவசாயம் பற்றிய அறிவையும் விரும்பிக் கற்று இவைகள் பற்றிய நுட்பங்களையும் அறிந்து கொண்டார். அத்துடன் நின்று விடாது பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினூடாக சிறுதானிய விருத்தியும் இலக்குகளும் என்ற திட்டத்தின் கீழ் இதுபற்றிய அறிவையும் பெற்றுக் கொண்டார்.

### விவசாயம்

நடைபெற்று வந்த யுத்தம் காரணமாக மக்கள் படுகின்ற துன்பத்திலிருந்து விடுபட உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்தார்.பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் ஊடாக அதற்காக உழைத்தார். முதற்கட்டமாக எமது நாயன்மார்கட்டுக் கிராமத்தில் உற்பத்திக் குழுக்கள் ஆரம்பிக்கப் பெற்றன. இரு உதவி அரசாங்க அதிபர்களின் பிரதேசமாக எமது பிரதேசம் காணப்பட்டபடியால் இவ் உற்பத்திக் குழுக்கள் இரண்டாகப் பிரிக்கப் பெற்றன. இதில் இருபாலை தெற்கு கிராமிய உற்பத்திக் குழுத்தலைவராக இவர் பொறுப்பேற்றுக் கொண்டார். நாயன்மார்கட்டு உற்பத்திக்குழுத் தலைவராக கா.இரகுநாதன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அப்பொறுப்புக்களிலிருந்த போது பல மக்கள் நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்த நேரத்தில் விவசாயம் சம்பந்தமாகத் தட்டுப்பாடு நிலவிய காலம் கமநல சேவை நிலையம் ஊடாக இருபாலை, செம்மணி, கட்டைப்பிராய், கல்வியங்காடு பிரதேச விவசாயிகளுக்கு காலபோக நெற்செய்கைக் குத் தேவையான நெல், உரம் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தார். அத்துடன் நின்று விடாது கோப்பாயிலுள்ள அரச சார்பற்ற நிறுவனமான மக்கள் நலன் காக்கும் பிரிவினூடாக எமது கிராம மக்களுக்கு U.S.AID விவசாயத் திட்டத்தை முன்னின்று நடாத்தியதன் விளைவாக நெல், உரம் மட்டுமல்லாது கிருமிநாசினி, விவசாய உபகரணங்கள் போன்றவற்றையும் கிடைக்கச் செய்தார். பின்னர் இத் திட்டங்களின் ஊடாக மக்களுக்கு கிடைக்கக் கூடிய பிரதேசங்களை விரிவாக்கி நல்லூர், கோப்பாய் எனப் பல பிரதேசங்களில் வாழ் விவசாயிகளும் பயனடைய வழிவகுத்தார். இத்தனை பணிகளுக்கு மத்தியிலும் செம்மணி வீதியின் இரு மருங்கிலும் யுத்தச் சூழலிலும் பனை மரங்களை நாட்டி வைத்தார். அவை இன்றும் வளர்ந்து நிற்பதைக் காணலாம். அத்துடன் நின்றுவிடாது அப்போது சிறுபோக விவசாயம் ஊக்குவிக்கப் பெற்றிருந்தது. அதையொட்டி விவசாயிகளுக்கு சிறுதானியம் வழங்கியும் நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கியும் எமது பிரதேச விவசாயிகளுக்கு உதவினார். சிறிய நாயன்மார் குளம் ஊடாக நடத்தப்பட்ட இத்திட்டத்தில் பெரும் அபிவிருத்தியும் வெற்றியும் பெற்றுக் கொண்டார். அத்தோடு இத்திட்டத்தின் கண்காணிப்பாளராகவும் பலவருடம் கடமையாற்றினார். விளைவாக சிறுபோககாலத்தில் பயன்படுத்துவதற்காக அமைக்கப்பெற்ற குளத்தின் நடுவிலுள்ள பெரும் கிணற்றையும் சிரமதானம் மூலம் சீர்செய்து கொடுத்தார். இக்காலகட்டத்தில் B.W 351 என்ற நெல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ரகத்தை செம்மணி, நாயன்மார்கட்டு பெரும்போக நெற்செய்கையாளருக்கும் அறிமுகம் செய்து அமோக விளைச்சலைப் பெற்று அந்த அறுவடை விழாவை பெருவிழாவாக நடாத்திக் காட்டினார். கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவின் கள மேற்பார்வையாளராகவும் கடமையாற்றி திட்டங்கள் உரியவர்களை சென்றடைய வழி வகுத்தார். யுத்தசூழல் இடம்பெயர்வு போன்றவற்றிலும் உதவி நின்றார். அந்த நேரம் வரணியில் அமைக்கப் பெற்ற இடைத்தங்கல் முகாம் மக்களுக்கு உதவுவதற்காக விவசாயிகளிடமிருந்து பல லட்ச ரூபாய்களை அன்பளிப்பாக பெற்று வழங்கியதுடன் அப்பிரிவு மக்கள் நலன் காக்கும் பிரிவில் பொருளாளராகவும் கடமையாற்றினார். அத்தனைக்கும் மத்தியில் யாழ்/ மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தில் ஏறக்குறைய ஒன்றரை வருடங்கள் கிளை முகாமையாளராகவும், பால் பதனிடல், யோக்கட் தயாரிப்பு, நெய் உற்பத்தி பிரிவுகளுக்கு பொறுப்பானவராகவும், தரம் பிரித்தல் பிரிவிலும் கடமையாற்றினார்.

### அரச சேவை

1998 ஆம் ஆண்டு யாழ்/ கல்வி வலயத்தில் தனது அரச பணியை தொடங்கினார். யாழ்/ நல்லூர் ஸ்தான சி.சி.த பாடசாலையிலும் பின்பு யாழ்/ சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயத்திலும் பின்பு நல்லூர் கோட்டத்திலும் கடமையாற்றி பின் யாழ்/ கல்வி வலயத்தில் தன்து சேவையை நிறைவு செய்து இறை ஆசியுடனும், கல்வியாளர்களின் வாழ்த்துடன் ஓய்வு பெறுகிறார்.

### பொதுப்பணிகள்

அப்போது நாவலர் சபை ஓர் பஜனை நடாத்தி வந்து அதில் கலந்து கொண்டவர். அரசாங்க அதிபராக யோகேந்திரா துரைசாமி காலத்தில் இந்து கலாசார மண்டபத்திற்கென கிட்டு பூங்காவில் சிறிய காணித் துண்டு வழங்கப்பட்டு அங்குள்ள அரச மரத்தின் கீழே ஓர் அழகிய வைரவர் ஆலயத்தை அமைத்து அதை பாலசுந்தர குருக்களை கொண்டு கும்பாபிஷேகம் செய்து வைத்ததுடன் இவர் தலைமையில் பூசையும், கூட்டுப் பிரார்த்தனையும் பல வருடங்களாக நடாத்தப்பட்டது. வெயிலுகந்தப்பிள்ளையார் கோவிலில் முத்தமிழ் மன்றத்தின் சார்பில் சமய அறிவுப் போட்டி நடாத்தி பரிசில்கள் வழங்க உழைத்தவர். பேச்சி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தில் தாகசாந்தி வழங்கும் அடியார்களை ஊக்குவித்து வந்தவர்.

நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் செயலாளராக பல வருடங்கள் கடமையாற்றியதுடன் நிலையத்தில் அம்பாள் வீதி வலம் வரும் போது பல வருடங்கள் நிறைகுடம் வைத்து உதவி நின்றவர். அத்துடன் ஆண்டு விழா, பரிசளிப்பு விழா போன்றவற்றை திறம்பட நடாத்தி உதவியவர்.

இராசையா குகதாசன் மணி விழா ஞாபகார்த்த நிதியத்தின் செயலாளராக கடமையாற்றி மகேஸ்வரி வித்தியாசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி ஒத்துழைத்தவர். இதே போல் சொக்கன் மணிவிழா சபை செயலாளராகவும் கடமையாற்றி அதன் மூலம் புலமைப்பரிசில் மாணவருக்கு கிடைக்க வழி செய்தவர். சைவ அபிவிருத்தி கழகத்தின் செயலாளராக கடமையாற்றிதோடு பல வருடங்களாக இராணுவச் சாவடிகளின் கெடுபிடிகளுக்கு மத்தியில் இரகுநாதன், சச்சிதானந்தன் ஆகியோருடன் இணைந்து திருவெம்பா பஜனையை மேற்கொண்டவர். வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான உப செயலாளராகவும் தொண்டர் சபை உறுப்பினராகவும் இருந்தவர். நாயன்மார் கட்டு பட்டாணி ஆதி பைரவ தேவஸ்தான உறுப்பினர், தொண்டர் ஸ்ரீ தேவி அம்மாள் ஆலய நித்திய தொண்டர்.

தற்போது பாரதி சனசமூக நிலையத்தின் கல்விப் பிரிவு பொருளாளராகவும் கடமையாற்றி வருவதோடு மாணவர்களின் பல செயலமர்வுகளையும் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றார். இவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் மக்கள் நலத்திட்டங்களுக்காக உழைக்கவும் இறையாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**பாரதி மன்றம்**
**சனசமூக நிலையம்**
**நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாரதி மகா வித்தியாலயம்

## கராத்தேயில் 2 தங்கப் பதக்கங்கள்



வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட கராத்தே போட்டியில் முல்/றெப்பானா, பாரதிபுரம் மகாவித்தியாலயத்திற்கு இரு தங்கப் பதக்கங்கள்.

குறித்த போட்டி அண்மையில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

மாகாண மட்ட கராத்தே போட்டியில் பாரதி மகா வித்தியாலயம் 18 வயது பிரிவில் சு. நிலக்சன் 1 ஆம் இடம்பெற்று தங்கப்பதக்கம், 20 வயது பிரிவில் ர.மதுமிதா 1 ஆம் இடம்பெற்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர்.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் இவர்களுக்கு பயிற்சியளித்த ஆசிரியருக்கும் முல்லைத்தீவு மாவட்ட அணி கராத்தே ஆசிரியருக்கும் பாடசாலையில் பாடசாலை அதிபர் ஆசிரியர்களினால் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)

# எல்லே போட்டியில் சம்பியனான

## நெல்லியடி மத்திய கல்லூரி



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான எல்லே போட்டியின் இறுதியாட்டம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணி 40 பந்துகளில் 11 இலக்குகளை இழந்து 10 ஓட்டங்களை பெற்றது. அவ்வணி சார்பில் விதுசன் 3, கவிஜன், டினுஜன் ஆகியோர் தலா இரு ஓட்டங்களையும், கௌசிகன், லக்சன், கர்ஷாந் ஆகியோர் ஒவ்வொரு ஓட்டங்களையும் பெற்றனர்.

மிகப் பெரிய வெற்றி இலக்கை நோக்கி நெல்லியடி மத்திய கல்லூரி அணி துடுப்பெடுத்தாடியது. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் லதுசனின் அபாரமான துடுப்பாட்டத்தால் 25 பந்துகளில் 6 இலக்குகளை இழந்து 11 ஓட்டங்களை பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

அவ்வணி சார்பில் லதுசன் 5 ஓட்டங்களையும் பிரவீன், யதுசன் ஆகியோர் தலா இரு ஓட்டங்களையும் சானுசன் சிவகுமாரன் ஆகியோர் ஒவ்வொரு ஓட்டங்களையும் பெற்றனர். 2024 ஆம் ஆண்டு சிறந்த எல்லே வீரராக நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் யதுசன் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

# முதல் தடவையாக மகுடம் சூடிய இலங்கை மகளிர்




2024 ஆம் ஆண்டு மகளிருக்கான ஆசியக் கிண்ணத்தை இலங்கை அணி முதல் முறையாக சுவீகரித்து சாதனை படைத்துள்ளது.

ரங்கிரி தம்புள்ளை கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற 9 ஆவது மகளிர் ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் இலங்கை மகளிர் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் டுக்களை இழந்து 165 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

166 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 18.4 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் கர்சிதா சமரவிக் ரம ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களை பெற்றதுடன், அணித்தலைவர் சாமர் அத்தபத்து 61 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க இந்திய மகளிர் அணியை 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இலங்கை மகளிர் அணி முதல் முறையாக ஆசியக் கிண்ணத்தைத் தன்வசப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. [illegible]

# இந்திய அணி அசத்தல்

## தொடரை இழந்த இலங்கை

இலங்கை அணிக்கு எதிரான முதலாவது இருபதுக்கு 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 43 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

கண்டி - பல்லேகல மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களை பெற்றது.

பின்னர் 214 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களை பெற்று தோல்வியடைந்தது. இதன்படி 3 போட்டிகள் கொண்டு இந்த இருபதுக்கு 20 தொடரில் ஒன்றுக்கு பூச்சியம் என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு ஜனா திபதித் தேர்தலில் தபால்மூல வாக்காளர்களின் வசதிக்காக வாக்காளர் பட்டியல் காட்சிப் படுத்தப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதன் படி, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தபால் மூல விண்ணப்பதாரர் களின் விண்ணப்பங்கள் அந் தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு அதாவது மாவட்ட தேர்தல் அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

ஒரே மாதிரியான பெயர்கள் இருப்ப தால், தபால் மூல விண்ணப்பதாரர்கள் தங்கள் தகவல்களை வேறொரு வரு டன் சரிபார்த்து, தபால் மூல விண் ணப்பங்களைப் பூர்த்தி செய்வதைத் தவிர்க்குமாறு தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.தபால் மூலம் வாக்களிக்கும் வசதியைப் பெறுவ தற்கான விண்ணப்பப் படிவங்களை வாக்காளர் பட்டியல் வைக்கப்பட்டுள்ள இடங்கள், மாவட்ட தேர்தல் அலுவலகங் கள் மற்றும் தேர்தல் ஆணை யத்தின் இணையத்தளத்தில் இருந்தும் இல வசமாகப்பெறலாம்.

தபால் மூலம் விண்ணப்பிக்க தகு தியுடைய அனைவரின் விண்ணப் பங்களும் ஒகஸ்ட் 5 ஆம் திகதி அல்லது அதற்கு முன் சம் மந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அதிகாரி யிடம் பெறப்பட வேண்டும்.கடைசி நாளான ஒகஸ்ட் 5 ஆம் திகதி நள்ளி ரவு 12 மணிக்குள் அந்தந்த மாவ ட்ட தேர்தல் அலுவல கங்களில் பெறப்பட வேண்டும்.

அன்றைய திக திக்குப் பிறகு பெறப் படும் விண்ணப்ப ங்கள் பரிசீலனை யின்றி நிராகரிக் கப்படும் என தேர் தல் ஆணை யத் தலைவர் ஆர். எம். எல். ரத்நாயக்க தெரிவித்தார். (நி-6)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(81)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 09 02 1948



விண்ணில் 27 07 2024

அளவெட்டி கிழக்கு, கணேஸ்வரம் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்.திரு. செல்லன் நல்லையா**

எமது சங்கத்தின் பணியாளர் திரு.ந.இலட்சுமிகாந்தன் என்பவரின் பாசமிகு தந்தையார் திரு.செல்லன் நல்லையா 27.07.2024 அன்று காலமானார். அன்னாரது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு,அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்: அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், சுன்னாகம்.ப.தெ.வ.அ.கூ.சங்கம். (மின்சார நிலைய வீதி, சுன்னாகம்)

# சஜித்துடன் கைகோர்க்கும் முஸ்லிம் காங்கிரஸ்




(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது ஆதரவினை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு வழங்கவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக் தெரி வித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்டோர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் ஏற்கனவே இணைந்து செயற்பட்டுள்ளதால், சஜித் பிரேமதாசவுக்கு உச்ச சபையின் ஆதரவு கிடைக்கும் எனவும் அவர் இதன்போது தேசிய நம்பிக்கை வெளியிட் டுள்ளார். (நி-6)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 22.07.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்



**ஐயாமுத்து சிவராசா**

[ஓய்வு பெற்ற கணித ஆசிரியரும், முன்னாள் கருணாலய ஆண்கள் இல்ல முகாமையாளரும்]

வாழ்தலை தாண்டி
வாழ்ந்து காட்டல் எனும்
பூரணத்துவத்துக்குள் அடங்கியது
உங்கள் வாழ்க்கை
உங்கள் ஆசீர்வாதம்
அரவணைக்க உங்கள்
வாழ்க்கைப்
பாதை பயணத்தில் நாமும்
தொடர்கிறோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்...

"ஸ்ரீ ரஞ்ஜனி வாசம்"
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (207)

குடும்பத்தினர்.

# இராசிபலன்

30.07.2024
ஆடி 14, செவ்வாய்க்கிழமை
தசமி முன்னிரவு 7.35 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 1.46 மணிவரை

சுபநேரம்- 10.33-12.03 மணிவரை
இராகுகாலம்-3.03-4.33 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்
உத்தரம், அத்தம்.

வளவன்

**மேஷம்** பணப்புழக்கம் அதி கரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப் புண்டு, காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** உடல் நலன் சீராக ஆகாரத்தில் கட்டுப் பாடு தேவை, உள் ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்** எடுத்த காரியங்களை நிறைவேற்றி அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**கடகம்** பணப்புழக்கம் அதி கரிக்கும் நாள், பய ணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஊக்கத் தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பொது வாழ்வில் மதி ப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**சிம்மம்** கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர் கள், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் சுப நிகழ் வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியா தையும் உயரும் வாய்ப்புண்டு.

**கன்னி** எதிர்ப்பாக இருந்த வர்கள் மனம் மாறு வர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகை யில் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், விரயங்கள் மேலோ ங்கும் நாள்.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற் சிகள் கைகூடும், செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**தனுசு** கடன் சுமை குறைய வழிவகை செய்வீர் கள், புகழ்மிக்கவர் களில் மதிப்பு கிடை க்கும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும், போட்டிகளில் முன் னேற்றம் காணும் நாள்.

**மகரம்** ஏட்டிக்குப் போட்டி யாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வீட்டு உபயோகப் பொரு ட்களை வாங்கி மகிழும் வாய்ப் புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கும்பம்** வளர்ச்சிப்பாதைக்கு நண்பர்களின் ஒத் துழைப்பு கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, சுப காரியச் செலவுகள் அதிகரிக் கும்.

**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர் பார்த்த சில நல்ல திருப்பங்க ளைக் காணலாம், வருமானம் திரு ப்தி தரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிதாகக் கிடைத்த பொருளுக்கு சரியான மதிப்பு இருக்காது.

# விவசாயமே வாழ்வாதாரம் குளத்தை ஆக்கிரமிக்காதே!

## கிளிநொச்சி மக்கள் கவனயீர்ப்பு

**(தருமபுரம்)**

**கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பிரிவின் கீழுள்ள கனகாம்பிகைக்குளத்தின் பகுதியை தனிநபர் ஒருவர் ஆக்கிரமிப்பதை தடுக்குமாறு கோரி பிரதேச மக்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**




குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கனகாம்பிகைக்குள கமக்காரர் அமைப்பினர், கிராம மக்கள், இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என கலந்து கொண்டனர்.

விவசாயமே எமது வாழ்வாதாரம், குளத்தை ஆக்கிரமிக்காதே, குளமே எங்கள் சொத்து, சட்டவிரோத காணி அபகரிப்பை அனுமதியோம் உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பு போராட்டம் நடைபெறுகின்ற குறித்த பகுதியை பார்வையிடுவதற்காக மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன், கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் ஆகியோர் வருகை தந்திருந்தனர். காணி தன்னுடையது என கூறும் ஆக்கிரமிப்பவரின் ஆவணத்தை கோரியிருந்தனர்.

எனினும் உரிய ஆவணம் இன்மையால் பரவப்பட்டுள்ள கிரவல்களை அகற்றுமாறு பொலிஸாருக்கு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் உத்தரவிட்டிருந்தார். (நி-6-316)



விசுவமடு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 12 ஆம் ஆண்டு விழாவினை முன்னிட்டு நேற்று புன்னை நீராவி பகுதியில் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

(படம்: சதீஸ், தேவானந்தம்)

# தீர்மானங்களை மீறி மேலதிக நெற் செய்கை

## விவசாயிகள் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள புலிங்கதேவன் முறிப்பு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட பகுதியில் சுமார் 750 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் மாவட்ட பயிர்செய்கை குழுவின் தீர்மானங்களை மீறி மேலதிக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கைக்கு தீர்மானிக்கப்பட்ட அளவுகளின்படி புலிங்கதேவன் முறிப்பு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள ஆயிரத்து 707 ஏக்கர் நீர் வரி காணிகளில் 530 ஏக்கர் காணி தவிர்ந்த ஏனைய ஆயிரத்து 177 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்வதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த பிரதேசத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்புடன் சேர்த்து மேலும் 750 ஏக்கர் நிலப்பரப்பு மேலதிகமாக செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன் விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். (நி-6-315)

# கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் Advanced Certi ficate in Computer Application, Web Designing Level-I. குறித்த கற்கை நெறி களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2024.08.02 விண்ணப்ப முடிவுத் திகதி ஆகும்.

இக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்ப படிவங்களையும் மேலதிக விபரங்களையும் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் அலுவலக நாட்களில் காலை 8 மணி தொடக்கம் 1.30 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 205 0565 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-6)

## வீதி ஓரத்தில் பூ மரம்

# விபத்து ஏற்படும் அச்சத்தில் பயணிக்கும் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு, ஞானவைரவர் வீதியில் வீதியின் இருமருங்கிலும் அழகுபடுத்தல் பூங்கன்றுகள் ஆங்காங்கே நாட்டப்பட்டிருப்பதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எண்ணூறு மீற்றர் நீளத்தைக் கொண்ட வீதி, நல்லூர் பிரதேச சபைக்குட்பட்டதாகக் காணப்படுகிறது.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் அரச, தனியார் வேலைகளுக்குச் செல்பவர்கள், விவசாயிகள் எனப் பெரும்பாலானோர் குறித்த வீதியை பயன்படுத்தி வரும் நிலையில், வீதியோரத்தில் நாட்டப்பட்டிருக்கும் அழகுபடுத்தல் பூமரங்களினால் பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் இதனால் விபத்துக்கள் நடைபெற்று விடுமோ என்ற அச்ச நிலையில் பயணிப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பலாலி வீதி, கே.கே.எஸ் வீதிகளை இணைப்பதாய் அமைந்துள்ள குறித்த வீதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து இவ்விடயம் தொடர்பில் நல்லூர் பிரதேச சபை உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் சுட்டிகாட்டியுள்ளனர். (நி-6)

## செம்பருத்தி இதழ்-2 ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் வெளியீடாகிய செம்பருத்தி இதழ்-02 இற்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

மலருக்கான ஆக்கங்களை எதிர்வரும் 10.08.2024 ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்கக்கூடிய வகையில் எமது பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறும் மலராக்கம் தொடர்பான விபரங்களை 021 226 0215 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் என வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# இ.போ.ச ஊழியர்களுக்கு நியமனக் கடிதங்கள்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் சாலைகளில் (டிப்போக்களில்) கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தற்காலிக அடிப்படையில் நிர்வாக பணிகளில் ஈடுபட்டு வருகின்றவர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்று முதற்கட்டமாக 29 பேருக்கான நியமனக் கடிதங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்மந்தப்பட்டவர்களுக்கு வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான

# கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் 8 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.


அதன்படி, புதிய மாணவர்களுக்கான உதவித்தொகையை செப்டெம்பர் மாதம் முதல் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வரையறுக்கப்பட்ட பயிற்சி பெற்று தற்போது இரண்டாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஒகஸ்ட் மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட உதவித் தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவர்களுக்கு வழங்கப்படும் ஐயாயிரம் ரூபாய் கொடுப்பனவு போதாது என்ற நீண்டகால கோரிக்கையின் அடிப்படையில் இந்த வருட ஆரம்பத்தில் கொடுப்பனவை மூவாயிரம் ரூபாயினால் அதிகரிக்க அமைச்சரவை தீர்மானம் எடுத்திருந்தது.

எனினும் அமைச்சின் போதிய நிதி ஒதுக்கீடுகள் இல்லாததால், அந்த முடிவை இது வரை நடைமுறைப்படுத்த முடியவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால் கிடைக்கும் பணத்தை நிர்வகித்து கொடுப்பனவை அதிகரிக்க அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

(இ)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி
12 இல் செவ்
உயரம் :5'8"
தகைமை/தொழில்:Nursing Officer, விவாகரத்தானவர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/13034

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா:30
உயரம் :6'3"
தகைமை/தொழில்:Software Engineer (Canada)
எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/14124

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1 இல் செவ்
உயரம் :6'2"
தகைமை/தொழில்:HND Computer Science,Computer Technician(France)
எதிர்பார்ப்பு: படித்த நற்குணமுள்ள மணமகள்
தொ.இ: B/14167

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 36 3/4
உயரம் : 5'2"
தகைமை/தொழில் :Software Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/11392

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 30 7 இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/ தொழில்: BA,DO
எதிர்பார்ப்பு:பட்டதாரி, அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/13551

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
2இல் செவ்
கி.பா:10
உயரம் :5'3"
தகைமை/தொழில்:Bachelor of Bio Systems Technology,Micro Biologist
எதிர்பார்ப்பு:Engineer
தொ.இ: G/14382

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்




(சி-2350)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமலா ஹாரிசுக்கு ஆதரவு அதிகரிப்பு ட்ரம்ப் ஆதரவாளர்கள் அதிர்ச்சி





(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வருகின்ற நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனாலட் ட்ரம்ப் போட்டியிடுகிறார்.

ஆளும் ஜனநாயகக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டது. ஆனால் ட்ரம்ப் உடனான விவாதத்தின் போது பேச தடுமாறியது மற்றும் உடல் நிலை காரணமாக அவர் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலக வேண்டும் என்று சொந்த கட்சியினரே அவருக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். கட்சியின் வேட்பாளரை மாற்ற வேண்டும் என ஜனநாயகக் கட்சியை சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கினர்.

இதையடுத்து ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகிக் கொள்வதாக ஜோ பைடன் தெரிவித்தார்.

மேலும் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய துணை ஜனாதிபதியான இந்திய வம்சாவளியை சேர்ந்த கமலா ஹாரிஸை முன்மொழிவதாக அவர் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவும் கமலா ஹாரிஸுக்கு ஆதரவு அளிப்பதாக தெரிவித்தார்.

இதையடுத்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான தனது பரப்புரையை கமலா ஹாரிஸ் தொடங்கினார் அவருக்கு பல்வேறு தரப்பினர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.


கமலா ஹாரிஸை ஜனாதிபதி வேட்பாளராக பலர் ஆதரிக்கத் தொடங்கியதும் அமெரிக்காவின் தேர்தல் களம் தலைகீழாக மாறியுள்ளது.

இந்த நிலையில் கமலா ஹாரிஸ் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பிறகு ஜனாதிபதித் தேர்தல் குறித்து புதிய கருத்துக் கணிப்புகள் நடத்தப்பட்டன. குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பை விட துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் 2 சதவீதம் அதிக புள்ளிகள் பெற்று முன்னிலையில் இருப்பதாக அந்தக் கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டது. (நி-6)

# பாகிஸ்தானில் பழங்குடியினரிடையே வெடித்த வன்முறை

➤ 36 பேர் உயிரிழப்பு

➤ 162 பேர் படுகாயம்




(இஸ்லாமபாத்)


வடகிழக்கு பாகிஸ்தானில் இரண்டு பழங்குடியின குழுக்களுக்கிடையே வெடித்த மோதலில் 36 பேர் கொல்லப்பட்டுள்ள சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானில் பழங்குடியினர் அதிகம் வாழும் மேல் குர்அம் மாவட்டத்தில் உள்ள போஷேரா கிராமத்தில் கடந்த 5 நாட்களாக மோதல்கள் நடந்துவருகின்றன.

ஆப்கனிஸ்தான் - பாகிஸ்தான் எல்லைப்பகுதியான ஹைபர் பதுன்காவா மாகாணத்தில் இந்த போஷேரா கிராமம் அமைந்துள்ளது. போஷேரா, மலிகேல், தண்டர் உள்ளிட்ட கிராமங்களில் வசித்து வரும் இஸ்லாமின் ஷியா பிரிவை பின்பற்றும் பழங்குடியினருக்கும் சன்னி பிரிவைப் பின் பற்றும் பழங்குடியினருக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் நிகழ்ந்துவந்துள்ளன. சமீபத்தில் அரசு நடத்திய பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் திரும்பிய நிலையில் போஷேரா கிராமத்தில் கடந்த 4 நாட்கள் முன் நிலத் தகராறு காரணமாக மீண்டும் இரு குழுக்களிடையிலும் வன்முறை வெடித்துள்ளது. துப்பாக்கிகள், ராக்கெட் லான்சர்கள் என நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தி இரண்டு தரப்பும் சண்டையிட்டு வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மட்டும் நான்கு பெரிய தாக்குதல் கள் நடந்துள்ளன. இந்த தாக்குதல்களில் 36 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 162 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் கலவரக்காரர்கள் தங்கியிருந்த பதுங்கு குழிகளை பொலிஸார் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர்.

இந்த வன்முறையானது மேல் குர் அம் மாவட்டத்தில் மற்ற பகுதிகளுக்கும் பரவி உள்ளதால் நிலைமையை சமாளிக்க முடியாமல் பொலிஸார் திணறி வருகின்றனர். (நி-6)

# 160 கோடி டொலரை உக்ரைனுக்கு அனுப்பிய ஐ.ஒன்றியம்



(பிரஸ்லஸ்)

முடக்கப்பட்ட ரஷ்யாவின் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் இலாபத்தைக் கொண்டு உக்ரைனுக்கு முதல்முறையாக 160கோடி டொலரை ஐரோப்பிய ஒன்றியம் அனுப்பியுள்ளது.

இதுகுறித்து ஐரோப்பிய ஆணையத்தலைவர் நேற்று முன் தினம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி ஐரோப்பிய யூனியன் எப்பொழுதும் உக்ரைனுக்கு ஆதரவாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக ரஷ்யாவின் முடக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து கிடைக்கப் பெற்ற பணத்தை அந் நாட்டுக்கு அனுப்பியுள்ளதாகவும், ரஷ்யா விடமிருந்து பாதுகாப்பைப் பெறவும் சேதங்களை மறுசீரமைக்கவும் இந்தத் தொகை அனுப்பப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உக்ரைனையும் ஐரோப்பாவையும் ரஷ்யாவிடமிருந்து பாதுகாக்க அந் நாட்டு பணத்தையே பயன்படுத்துவது தான் சிறந்த வழி என தெரிவிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் மீதான போரை ரஷ்யா நிறுத்த வேண்டும் எனக் கூறி வரும் உலக நாடுகள், உக்ரைனுக்கு ஆயுதங்கள் மற்றும் நிதியுதவி போன்றவற்றை செய்து வருகின்றன.

ஆனால், சில உள்ளூர் பொருளாதார நிலைமைகளினால் அந்த நிதியை அளிப்பதில் சிரமம் ஏற்படவே, முடக்கப்பட்ட ரஷ்ய சொத்துக்களின் வருவாயை உக்ரைனுக்கு வழங்கும்படி ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கூறி வந்தனர்.

இந்த செயற்பாட்டுக்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்து வருவதோடு, இந்த செயற்பாட்டினால் சொத்துக்களை பாதுகாப்பாக முதலீடு செய்ய ஏற்ற இடம் என்ற பெயரை ஐரோப்பிய நாடுகள் இழந்து விடும். இது அந்த நாடுகளின் பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கும் எனவும் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தென் கொரியாவை வடகொ… அறிமுகப்படுத்திய அறி…

## மன்னிப்புக் கேட்ட ஒலிம்…




(பாரிஸ்)

ஒலிம்பிக் தொடக்க விழாவின் போது தென் கொரியாவை வடகொரியா என்று தவறாக அழைத்ததற்காக ஒலிம்பிக் அமைப்பாளர்கள் "மன்னிப்… கோரியுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று நடந்த பாரி… விளையாட்டுப் போட்டிகளின் தொட…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயே





டந்த 4
மாறு கார
ழுக்களி
வெடித்
ாக்கெட்
ஆயுதங்
இரண்டு
வருவது
ள்ளது.
ரவு மட்
தல் கள்
க்குதல்
ந்துள்ள
படைந்
ார் தெரி
வர்க்கா
ங்கு குழி
ர் கட்டுப்
ளனர்.
யானது
ில் மற்ற
ள்ளதால்
க முடி
றி வரு
(நி-6)

# வணிகக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவோம்!

## பிரித்தானியா மற்றும் அமெரிக்காவை எச்சரிக்கும் ஹமாஸ்

(ஏமன்)

**இனிவரும் காலங்களில், பிரித்தானிய மற்றும் அமெரிக்க வணிகக் கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படும் என ஹமாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.**



ஏமன் மீது, அமெரிக்கா மற்றும் பிரித்தானிய கூட்டுப்படையினர் நடத்திய ஏவுகணைத் தாக்குதலையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் அங்கு போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் பிரித்தானிய கூட்டுப்படையினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில், ஏமனின் ஹுடைடா விமான நிலையம் மற்றும் கமரன் தீவு ஆகியவை கடுமையாக சேதமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் குறித்து இதுவரை எவ்வித விபரங்களும் வெளியாகவில்லை.

எனினும், இந்த தாக்குதல் காரணமாக அங்கு விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல்-காசா போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

அதன்படி, செங்கடல் வழியாக பயணிக்கும் இஸ்ரேல் மற்றும் அதனுடன் தொடர்புடைய கப்பல்கள் மீது, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட ஏனைய நாடுகளின் வணிக கப்பல்களும் சேதம் அடைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, செங்கடல் வழியாக பயணிக்கும் வணிக கப்பல்களை பாதுகாக்க அமெரிக்கா தலைமையில் ஒரு கூட்டுப்படை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டுப்படையில் பிரித்தானியா, ஜேர்மனி உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் இணைந்துள்ளன.

குறித்த கூட்டுப்படையினர் செங்கடல் பகுதியில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருவதுடன், ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களுக்கு உடனடியாக பதிலடி தாக்குதலும் நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, ஹவுதி கிளர்ச்சியாளர்கள், இஸ்ரேலின் டெல் அவிவ் நகரை குறிவைத்து அண்மையில் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததாகவும், 10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்திருந்தார்.

இந் நிலையிலேயே, இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு பதிலடியாக அமெரிக்கா மற்றும் பிரித்தானிய கூட்டுப்படையினர் ஏமன் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-6)

## டகொரியா என
## றிவிப்பாளர்
## லிம்பிக் சபை



மன்னிப்பு"

ந்த பாரிஸ்
தொடக்க

விழாவில் தென் கொரிய வீரர்களை வடகொரியர்கள் என அறிவித்தனர்.

தென் கொரியாவின் முழுப் பெயர் கொரியா குடியரசு.செய்ன் கப்பலில் தென் கொரியாவின் படகின் பக்கத்தில் உள்ள அடையாளம் சரியாக லேபிளிடப்பட்டது.

பிரெஞ்சு மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அறிவிப்பாளர்கள் செய்த தவறுக்குப் பிறகு, ஒலிம்பிக் கமிட்டி X இல் "தொடக்க விழா ஒளிபரப்பின் போது கொரிய அணியை அறிமுகப்படுத்தியபோது ஏற்பட்ட தவறுக்கு நாங்கள் ஆழ்ந்த மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம்." என பதிவிட்டுள்ளது. (நி-6)

# காசா பிரச்சினையை முடிவுறுத்துமாறு டொனால் ட்ரம்ப் வலியுறுத்து

(வோஷிங்டன்)

காசா பிரச்சினையை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ள நிலையில், அதனை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்காவுக்குப் விஜயம் செய்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமரின் அமெரிக்க வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து, வீதிகளில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீன ஆதரவாளர்கள் திரண்டு அவரது உருவ பொம்மை மற்றும் அமெரிக்கக் கொடியை எரித்து போராட்டம் நடத்தியிருந்ததாகவும் அமெரிக்க செய்திகள் தெரிவிக்கின்றன.



எவ்வாறாயினும், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அமெரிக்காவிற்கு விஜயம் செய்த பெஞ்சமின் நெதன்யாகு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை சந்தித்து காசா போர் குறித்து பேச்சு வார்த்தை நடந்தியுள்ளார்.

காசா விடயத்தில் அமைதிப் பேச்சு வார்த்தையை விரும்புவதாக அமெரிக்கா கூறி வந்தாலும் இஸ்ரேலுக்கு அதிகளவில் அமெரிக்கா நிதி வழங்கி வருவதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தங்களுக்கான சாதக பாதகங்களைக் கணக்கில் வைத்து, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, டொனால்ட் ட்ரம்பையும் சந்தித்து பேசியுள்ளார்.

இந்த சந்திப்பில் காசாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், காசா பிரச்சனையை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருமாறு இஸ்ரேல் பிரதமரிடம், டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளதாகவும் ஆனால் அதனை இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாக மறுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரிப்பு

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

**(கொழும்பு)**

**சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் தற்போது அதிகரித்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.**

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதியில் சிறுவர்கள் தவறான நடத்தைக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் 290 முறைப்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் மாதாந்தம் இவ்வாறான பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுவர்கள் தொடர்பான அதிகளவான முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் இருந்து பெறப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# சிறுமி துஷ்பிரயோகம் தொடர்பில் குற்றவாளிக்கு கடூழிய சிறை தண்டனை

## கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சிப் பகுதியில் 15 வயதுக்கு குறைவான சிறுமி ஒருவரை துஷ்பிர யோகத்திற்கு உட்படுத்திய குற்றச் சாட்டில் தலைமறைவாக இருந்த நபருக்கு 13 ஆண்டுகள் கடூழியச் சிறை தண்டனை விதித்து கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் குறித்த நபர் 15 வயதுக்கு குறைவான சிறுமி ஒரு வரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத் திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இக் குற்றச்சாட்டுத் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கிளிநொச்சி மேல்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட குறித்த வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் குறித்த தீர்ப்பு கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது.

எனினும் குறித்த குற்றவாளி தலைமறைவாகி இருந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை குறித்த நபர் கைது செய்யப்பட்டு மேல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 280 | 280 | 160-220 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 230 | 210 |
| பச்சைமிளகாய் | 400 | 480 | 500 | 400-500 |
| தக்காளி | 400 | 300 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 160 | 140-200 |
| கோவா | 400 | 300 | 400 | 250 |
| கரட் | 450 | 450 | 400 | 300 |
| பூசணி | 180 | 150 | 200 | 160 |
| புடோல் | 150 | 160 | 180 | 200 |
| வாழைக்காய் | 160 | 200 | 200 | 220 |
| சின்ன.வெங்காயம் | 280 | 450 | 350 | 250-500 |
| பெரிய வெங்காயம் | 250 | 360 | 250 | 220 |
| பாகற்காய் | 400 | 400 | 450 | 450 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 200 | 150 | 180 | 160 |
| பயற்றங்காய் | 300 | 220 | 150 | 150-200 |
| லீக்ஸ் | 350 | 500 | 500 | 300 |
| பீற்றூட் | 400 | 380 | 450 | 450 |
| கறிமிளகாய் | 800 | 800 | 1000 | 400 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 200 | 50-80 |
| போஞ்சி | 800 | 450 | 700 | 400 |
| கத்தரி தம்புள்ள | 200 | 150 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 60 |
| தேசிக்காய் | 400 | 600 | 600 | 500-600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 60-100 |
| இராசவள்ளி | 700 | 450 | 700 | -- |
| வெங்காயப்பூ | 200 | 200 | 300 | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 150 | 100 |
| வல்லாரை | 50 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 80 | 100 |

# இன்று ஒரு தகவல் 198



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# பிரம்மஞான விளக்கம்

ஒரு நாள் பிரம்ம ஞானத்தைப் பற்றி ஏதோ கொஞ்சம் சொல்லப்போய் சில பேர் நேராகவே தேடிக் கொண்டுவர ஆரம்பித்து விட்டார்கள் சார். நான் ஏதோ அந்த ஞானத்தை மொத்தமாக வைத்துக் கொண்டு வியாபாரம் செய்வதாக நினைத்துக் கொண்டு எனக்கு கொஞ்சம் கொடு என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள். என்னிடம் அது இருந்தால் நான் ஏன் இப்படி அதைப்பற்றி வெளியிலே சொல்லிக்கொண்டு உட்காந்திருக்கின்றேன்? என்றார்.

சார் மிகவும் அடக்கமாக பேசுகின்றார். நிறைகுடம் தளும்பாது என்றார் ஒருவர். வெறும் குடமும் தளும்புவதில்லை என்கின்ற விவரம் அவருக்கு தெரியவில்லை. ஒரு அப்பா தன்னுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் பிரம்மஞானம் வர வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஒரு நல்ல குருவிடம் அனுப்பி வைத்தார். குருகுலவாசம் முடிந்து அவர்கள் இரண்டு பேரும் திரும்பி வந்தார்கள்.

முதலிலே மூத்த பையனைப் பார்த்து பிரம்மத்தைப் பற்றி நீ என்ன தெரிந்து கொண்டாய்? என்றார் அப்பா. உடனே அவன் ஒரு பெரிய பிரசங்கமே செய்ய ஆரம்பித்து விட்டான். வேதங்களிலே இருந்து, சாஸ்திரங்களிலேயிருந்து நிறைய உதாரணங்கள் எல்லாம் எடுத்து அடித்து விட்டான். பிரசங்கம் முடியவில்லை.

சரி போதும் நிறுத்து என்று சொல்லிவிட்டு இரண்டாவது பிள்ளையைப் பார்த்து பிரம்மத்தைப் பற்றி நீ என்ன தெரிந்து கொண்டாய்? என்றார் அப்பா. அவன் பதில் சொல்லவில்லை. தலையைக் குனிந்து கொண்டு நின்றுகொண்டிருந்தான். அப்பா பார்த்தார். நீ தான் பிரம்மத்தைப் பற்றி ஏதோ கொஞ்சம் தெரிந்து வைத்திருக்கின்றாய் என்றார்.

பிரம்மம் என்றால் என்ன என்பதைப் பற்றி முழுவதும் தெரிந்து கொண்டதாக பல பேர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அது எப்படி இருக்கிறது என்றால் பிரமாண்டமான சர்க்கரை மலையிலேயிருந்து ஒரு துணுக்கு சர்க்கரையை எடுத்துக் கொண்டு போகின்ற எறும்பு அடுத்த தடவை முழு சக்கரை மலையையும் தூக்கிக் கொண்டு போவோம் என்று சொல்வது மாதிரி இருக்கின்றது என்கின்றார் ராமகிருஷ்ண பரமஹம்சர்.

பிரம்மம் என்கின்றது நம்முடைய எண்ணங்களுக்கும் வார்த்தைகளுக்கும் அப்பாற்பட்டது. சுகதேவர் மாதிரி உள்ள பெரிய மாகான்களைக் கூட அந்த விடயத்திலே ஒரு எறும்பு என்று சொல்லாம். அவ்வளவு தான். அவர்கள் எல்லாம் ஒரு ஏழெட்டு சர்க்கரை துணுக்கை தூக்கிக் கொண்டு போகின்றார்கள் அவ்வளவும் தான்.

பிரம்மம் என்கின்ற பெரிய கடலினுடைய கரையிலே நின்று அவர்களெல்லாம் காலை நனைத்திருக்கின்றார்கள். அந்த அளவு தான் சொல்ல முடியும். அதிலே அவர்கள் மூழ்கவில்லை. மூழ்கியிருந்தால் அவர்கள் திரும்பியிருக்கமாட்டார்கள்.

ஒரு சின்ன உப்புப் பொம்மை இருந்ததாம். அதற்கு ஒரு ஆசை என்ன தெரியுமா? கடல் எவ்வளவு ஆழமாக இருக்கிறது என்று நேராக உள்ளே போய்ப்பார்த்து கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆசை. ஆசை வந்ததன் பின் சும்மா இருக்குமா?

சரி அளந்து பார்த்து விடுவோம் என்று தீர்மானம் செய்தது. உடனே பொத் என்று கடலிலே குதித்தது. கொஞ்சத் தூரம் போனது அவ்வளவும் தான். உப்பு பொம்மை கடலிலே விழுந்தால் என்ன ஆகும். கொஞ்சம் கொஞ்சமாக கரைய ஆரம்பித்தது. சிறிது நேரத்திலே சுத்தமாகக் கரைந்து ஒன்று மில்லாமல் போய்விட்டது.

அந்தப் பொம்மையால் ஆழத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதையே கண்டுபிடிக்க முடியவில்லை என்று ஆனதற்கு பின் அது போய் கடல் ஆழத்தை எந்த காலத்திலே கண்டுபிடிக்க போகின்றது. பிரம்மஞானம் வந்துவிட்டால் மனிதன் மௌனமாக இருக்கின்றான். அது வருகின்ற வரைக்கும் அவன் சர்ச்சை செய்து கொண்டிருப்பான்.

தேன் குடிப்பதற்காக ஒரு வண்டு வருகின்றது. அது மலர் மேலே உட்காருகின்ற வரைக்கும் தான் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும். உட்கார்ந்து விட்டால் மௌனமாகி விடுகின்றது. அது மாதிரித்தான். இதெல்லாம் ராமகிருஷ்ணருடைய அமுத மொழிகள்.

இது ஒரு பக்கம் இருக்கட்டும். என்னிடம் வந்து பிரம்மஞானத்தைப்பற்றி விளக்கம் கேட்ட ஒருவரிடம் எனக்கு என்னென்ன தோன்றியதோ அதை எல்லாம் விளக்கமாகச் சொன்னேன்.

அவர் என்னிடம் வருகின்ற போது வள வள என்று பேசிக் கொண்டு கேள்வி கேட்டுக் கொண்டே வந்தார். ஒரு அரை மணி நேரம் என்னுடைய பேச்சைக் கேட்டவுடன் அவர் மௌனமாகிவிட்டார். பிரம்மஞானம் வந்து விட்ட மாதிரி. மௌனமாக எழுந்து என்னிடம் சொல்லாமல் புறப்பட்டார்.

ஏன் சார் புறப்படுகிறீர்கள் என்றேன். தெரியாத்தனமாக உங்களிடம் வந்து விளக்கம் கேட்டுவிட்டேன். அதைக் கேட்டவுடனே ஏற்கனவே கொஞ்சம் நஞ்சம் தெரிந்து வைத்திருந்ததையும் மறந்துவிட்டேன். இனிமேல் சந்தேகம் வருவதற்கு வாய்ப்பு இல்லை. அதனாலே தான் மௌனமாகிவிட்டேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை விரைவில் புனரமைத்து பேருந்து சேவையை நடத்துங்கள்

## சுதந்திரபுர மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு சுதந்திரபுர கிராமத்திற்கான முதன்மை வீதியினை புனரமைத்து பேருந்து வேவையை நடத்த வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரிடம் இக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுதந்திரபுரம் கிராமத்தில் 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஏ-35 சாலையிலிருந்து கிராமத்திற்கான கொங்கிறீட் வீதி அமைக்கப்பட்ட போதிலும் குறித்த வீதி தற்போது பல இடங்களில் தேசமடைந்திருப்பதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

1000 குடுபங்கள் வாழ்கின்ற கிராமத்திற்கு சேதமடைந்த வீதியினைச் சுட்டிக்காட்டி பேருந்துகள் வருவதில்லை. இதன் காரணமாக அக்கிராம மக்கள் 8 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றே சுதந்திரபுரம் சந்தியில் இருந்து புதுக்குடியிருப்புக்கோ, பிற இடங்களிற்கோ பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக கிராம மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் நடைபெற்ற கூட்டங்களில் வீதியினை புனரமைத்து பேருந்து சேவைகளை நடத்துமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் அவை நிறைவேற்றப்படாமல் உள்ளதாக சுதந்திர மக்கள் தெரிவிக்கின்றனர்.

(நி-6-350)

# மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த முதலை

## பாதுகாப்பாக அப்புறப்படுத்திய அதிகாரிகள்



(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வன்னேரிக்குள ஐயனார்புரம் பகுதியில் உள்ள கிராமத்தில் சில தினங்களாக முதலைகள் மக்கள் குடியிருப்புப் பகுதியில் புகுந்து மக்களுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வந்தது.

கடந்த 25 ஆம் திகதி மூன்று குரங்குகளை முதலை பிடித்து உண்டதன் காரணத்தினால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்திற்குள்ளாகி உள்ளனர்.

சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் தமது நாளாந்த கடமைகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டதன் காரணத்தினால் கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சிவனஜீவராசிகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட தகவலிற்கமைவாக அன்று மாலை வனஜீவராசி திணைக்களத்தினர் முதலையினை பாதுகாப்பாக பிடித்து அப்பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு அப்புறப்படுத் தியுள்ளனர். (நி-6-350)

# அக்கராயன் வைத்தியசாலையில் உணவக வசதி இல்லை

## நோயாளர்கள் சிரமம்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் உணவகம் இல்லாதது தொடர்பாக வைத்தியசாலைக்கு செல்லும் நோயளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

2010 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை வைத்தியசாலையில் உணவகம் இல்லாததன் காரணமாக 800 மீற்றர் தூரம் சென்று நோயாளர்கள் உணவைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாகவுள்ளது.

தற்போது அக்கராயன் வைத்தியசாலையில் இரத்தப் பரிசோதனைகள் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குருதிப் பரிசோதனைக்காக வரும் நோயாளர்கள் உணவு, தேநீர் அருந்தாமல் வருகை தருவதனால் குருதியினை வழங்கியவுடன் உணவு உட்கொள்ள வைத்திய சாலையில் உணவக வசதி இல்லாமல் சிரமப்படு கின்றனர்.


கடந்த 15 ஆண்டுகளாக இவ் வைத்தியசாலையில் உணவகம் அமைக்கப்படவில்லை. 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் கூட இவ் வைத்தியசாலையில் உணவகங்கள் சிறப்பாக இயங்கின. ஆனால் தற்போது அவ்வாறான நிலைமைகள் இல்லை.

இவ் வைத்தியசாலையினை நம்பி வன்னேரிக் குளம், ஆனை விழுந்தான் குளம், அமதிபுரம், ஆரோக்கியபுரம், கந்தபுரம், முக்கொம்பன், கண்ணகைபுரம், கோணாவில், யுனியங்குளம், அக்கராயன் மேற்கு, கிழக்கு, மத்தி, கெங்காதரன் குடியிருப்பு, முல்லைத்தீவின் அம்பலப்பெருமாள் குளம், கோட்டை கட்டிய குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஐயாயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் உணவகம் இல்லாததால் உள்ளக, வெளியக நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். (நி-6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3182

**சுசில்**


பஸ்ஸ ஏறி சீட்ல உட்காந்தவுடனே தூங்குறவருக்கு வின்டோ சீட்டும்



வேடிக்கை பார்க்க விரும்புவோருக்கு பக்கத்து சீட்டும் கிடைப்பது எழுதப்படாத ஒன்று

**ரதித்தா**

இது தான் உன் மாமியார் வீடு இவங்கள் வீட்டுல எல்லோரிடமும் நீ நல்ல பேர் வாங்கனும்




நீங்கள் வைச்ச பேரே நல்லா தானே இருக்கு இவங்களிட்ட ஏதுக்கு நல்ல பேர் வாங்கனும்

**லோகேஷ்**


3 தோசை மெல்லியதாகவும் 4. ஆவது தோசை கனமாவும் ஊத்தினால் என்ன அர்த்தம்?



இதோட எழுந்திரிச்சு போடா என்று அர்த்தம்

**பிறேமினி**

என்ன விட்டு போக மாட்டியா?




மாட்டவே மாட்டேன்... எனக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்கும்


**ராகவ்**




நான் ஒன்று நினைக்க அது ஒன்று நினைக்க சம்பந்தமே இல்லமா ஏதோ ஒன்று நடக்க ஒரே கூத்தா இருக்கும்

**சஞ்சீவன்**

மரத்தோடு இருக்கும் வரை தான் இலைக்கு மதிப்பு



பணத்தோடு இருக்கும் வரை தான் மனிதனுக்கு மதிப்பு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 545





ஒன்பதாம் அத்தியாயம்
ஓடத்தில் மூவர்

பொழுது புலர்ந்தது, கரு நிற அழகியான இரவெனும் தேவி உலக நாயகனை விட்டுப் பிரிய மனமின்றிப் பிரிந்து செல்ல நேர்ந்தது. நாயகனைத் தழுவியிருந்த அவளுடைய கரங்கள் இலேசாகக் கழன்று விழுந்தன. வாழ்க்கையிலே கடைசி முத்தம் கொடுப்பவளைப் போல் கொடுத்து விட்டு இரவெனும் தேவி இன்னும் தயங்கி நின்றாள். "மாலையில் மறுபடியும் சந்திப்போம். நாலு ஜாம நேரந் தானே இந்தப் பிரிவு? சந்தோஷமாகப் போய்வா!" என்றது உலகம். இரவு தயங்கித் தயங்கி உலகத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு சென்றது.

உள்ளத்திலே அன்பில்லாத கள்ளக் காதலனைப் போல் இரவு பிரிந்து சென்றதும் உலகம் மகிழ்ச்சியினால் சிலிர்த்தது. "ஆகா விடுதலை!" என்று ஆயிரமாயிரம் பறவை இனங்கள் பாடிக் களித்தன. மரங்களிலும், செடிகளிலும் மொட்டுக்கள் வெடித்து மலர்ந்தன. எங்கிருந்தோ வண்டுகள் மந்தை மந்தையாக வந்து இதழ் விரிந்த மலர்களைச் சூழ்ந்து கொண்டு இன்னிசை பாடிக் களித்தன. விதவிதமான வர்ணச் சிறகுகள் உள்ள தட்டாரப் பூச்சிகள் நாலா பக்கங்களிலும் ஆனந்தக் கூத்தாடின.

கீழ்வானத்தில் பொன்னிறம் கண்டது. வானச் சுடர்கள் ஒவ்வொன்றாக ஒளி மங்கி மறைந்தன.

இதுவரையில் வான வீதியில் பவனி வந்து கொண்டிருந்த பிறைச் சந்திரன் "நிற்கட்டுமா? போகட்டுமா?" என்று கேட்டுக் கொண்டிருந்தான்.

ஓடையில் படகு மெல்ல மெல்லச் சென்று கொண்டிருந்தது. பட்சிகளின் கோஷ்டி கானத்தோடு துடுப்பு தண்ணீரைத் தள்ளும் சலசல சப்தமும் பூங்குழலியின் செவிகளில் விழுந்தது. திடுக்கிட்டுக் கண் விழித்தாள். ஒரு கிளையில் வெடித்த இரண்டு அழகிய நீலநிற மொட்டுக்கள் ஒருங்கே மலர்ந்தது போல் அவளுடைய கண்ணிமைகள் திறந்தன. எதிரே இளவரசரின் பொன்முகம் தோன்றியது. இன்னும் அவர் தூங்கிக் கொண்டிருந்தார். தூக்கந் தானா? அல்லது சுரவேகத்தில் இன்னமும் உணர்ச்சியற்றிருக்கிறாரா? தெரியவில்லை. எனினும் அவருடைய திருமுகம் எவ்வளவு பிரகாசமாயிருக்கிறது!

அப்பால் சேந்தன் அமுதன் துடுப்புத் தள்ளிக் கொண்டிருந்தான்.

"பூங்குழலி! ஏன் அதற்குள் விழித்துக் கொண்டாய்? இன்னும் சற்று நேரம் தூங்குவது தானே?" என்றான்.

பூங்குழலி புன்னகை பூத்தாள். முகத்திலிருந்த இதழ்களிலே மட்டும் அவள் புன்னகை செய்யவில்லை. அவளுடைய திருமேனி முழுதும் குறுநகை பூத்தது.

காட்டிலே பிறந்து வளர்ந்து வாழ்ந்தவள் பூங்குழலி. ஆயினும் பட்சிகளின் கானமும், வண்டுகளின் கீதமும் இவ்வளவு இனிமையாக அவளுடைய செவிகளில் என்றைக்கும் தொனித்ததில்லை.

"அத்தான்! உதய ராகத்தில் ஒரு பாட்டுப்பாடு!" என்றாள் பூங்குழலி.

"நீ இருக்குமிடத்தில் நான் வாயைத் திறப்பேனா? நீ தான் பாடு!" என்றான் சேந்தன் அமுதன்.

இராத்திரி இருளடர்ந்த காட்டில் பாடினாயே? காரிய நிமித்தமாகப் பாடினேன். இப்போது நீ பாடு!

எனக்கும் பாட வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. ஆனால் இளவரசருக்குத் தொந்தரவாயிருக்குமல்லவா?

எனக்குத் தொந்தரவு ஒன்றுமில்லை. இரண்டு பேரும் சேர்ந்து பாடுங்கள்! என்றார் அருள்மொழிவர்மர்.

பூங்குழலி வெட்கத்தினால் தலை குனிந்து கொண்டாள்.

படகு எங்கே போகிறது? என்று இளவரசர் கேட்டார்.

நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்திற்கு என்றாள் பூங்குழலி.

அப்படியானால் இராத்திரி நான் கண்டது கேட்டதெல்லாம் கனவல்லவா? உண்மைதானா?"

ஆம், ஐயா! இதோ இவர் தான் தங்கள் தமக்கையாரிடமிருந்து செய்தி கொண்டு வந்தவர். (தொடரும்...)





# சிறுவர் அரங்கம்

## அன்பின் மதிப்பு

குணசீலன் என்கிற அரசன் ஒருவன் நோய் வாய்ப்பட்டு, பல நாட்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்க தினமும் பல பிரமுகர்கள் வந்துகொண்டிருந்தனர்.

ஒருநாள், சில பெரிய மனிதர்கள் பலவித பழங்களைக் கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்துப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது, ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளிகளையும் பொருட்படுத்தாமல் மன்னனின் படுக்கையருகே வந்து நின்றான்.

அவனது கலைந்த தலைமுடியும் ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் தன் கிராமத்திலிருந்து வெகு தூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை அறிவித்தன.

அவன் மன்னனிடம், அரசே.. உங்கள் உடல் தேறவேண்டுமென்று எங்கள் ஊர் மாரியம்மனுக்குப் பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள். அம்மன் பிரசாதத்தைச் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடிவிடும் என்றான்.

அவன் பிரசாதத்தை வெளியே எடுத்ததும் [illegible] கெட்டுப் போன நாற்றம் [illegible] கிருந்த பிரமுகர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டார்கள். முகம் சுளித்தார்கள். அரசனோ, பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, தன் கழுத்தில் இருந்து முத்து மாலையைக் கழற்றி எடுத்து, அந்த விவசாயிக்கு பரிசளித்து அனுப்பினான்.

மன்னனுக்கு வேண்டிய பிரமுகர் ஒருவர், "அரசே, கெட்டுப் போன பொங்கலுக்கா முத்து மாலை பரிசு?" என்று கேட்டார். மன்னனோ, "அது கெட்டிருந்தாலும் அந்தப் பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடைய வேண்டும் என்று விரும்பி கள்ளம் கபடமற்ற மனதுடன் தன் கிராமத்திலிருந்து ஒரு வாரம் நடந்து வந்திருக்கிறான்.

அவனது அன்பு உண்மையானது. போலித் தனம்இல்லாதது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம். நான் அளித்த முத்துமாலை கூட அவனது அன்புக்கு ஈடாகாது என்று கூறினான்.

நமது அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே கையைக் கட்டிக் கொண்டு நமக்கு சேவை புரிய வந்து நிற்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது மன சக்தியின் மூலம் எதையும் சாதிக்க முடியும், தூய பண்புகளால் மலையையும் நகர்த்த முடியும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ரணில் வகுத்த வியூகத்தில் அகப்பட்ட மொட்டுக் கட்சி

தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வியூகத்தை அமைப்பதற்கென தனியான அமைப்புகள் செயலாற்றி வருவது அனைவரும் அறியாத விடயம்.

முன்பெல்லாம் அரசியல் வியூகங்களை அரசியல்வாதிகள் வகுத்து, அதனைக் கட்சித் தொண்டர்கள் மூலம் அமுலாக்குவர்.

ஆனால் சமகாலத்தில் இதற்கென்றே கம்பனிகள் உருவாகியுள்ளன.

கோடிக்கணக்கான ரூபாய்களைப் பேரம் பேசி கட்டணமாக அறவிட்டுக் கொண்டு குறித்த கட்சியின் வெற்றிக்காக பிரஸ்தாப கம்பனிகள் செயலாற்றும்.

இதில் குறித்த கட்சி சார்ந்த வேட்பாளரின் ஆடைகள் முதற்கொண்டு அவரின் அலங்கரிப்புகள், பொதுமக்கள் மத்தியில் நடந்து கொள்ள வேண்டிய முறைமைகள், விளம்பர யுக்திகள், தேர்தல் பிரசார ஏற்பாடுகள், பிரசார மேடைகளில் பேசுகின்ற ஒழுங்குமுறைகள் என இன்னோரன்னவற்றை குறித்த நிறுவனங்களே தீர்மானிக்கும்.

இதனை ஒருபடி மேற்சென்று விளங்கிக் கொள்வதாயின், எல்.கே.ஜி என்ற தமிழ் சினிமாத் திரைப்படத்தைப் பார்த்தால் போதுமானது என்பதுடன் இஃது ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட கையோடு தேர்தல் களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

இதில் வியப்பு என்னவெனில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது பற்றிய அறிவிப்பை மிகவும் காலம் தாழ்த்தி அறிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேர்தலுக்கான கட்டுப்பணத்தை முதல் நாளே செலுத்தினார் என்பதுதான்.

பொதுவில் ஜனாதிபதியாக இருக்கின்ற ஒருவர் அல்லது ஆட்சித் தரப்பில் இருக்கின்றவர்கள் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை இறுதித் தினங்களிலேயே செலுத்துவது வழமை.

ஆனால் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்துகின்ற முதல் நாளிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டுப்பணத்தைச் செலுத்தி தன்னை ஒரு ஜனாதிபதி வேட்பாளராக அறியப்படுத்தியுள்ளார்.

இங்குதான் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் வியூகம் முன்னிலை பெறுகிறது.

ஆம், எந்தக் கட்சியையும் சாராமல் தன்னை ஒரு சுயேட்சை வேட்பாளராக அடையாளப்படுத்துவதை அவர் முதன்மைப்படுத்தியுள்ளார்.

ஆம், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தன்னை ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக அறியப்படுத்தவில்லை.

அதேநேரம் மொட்டுக்கட்சியின் சார்பில் தேர்தலில் நிற்பதையும் அவர் விரும்பவில்லை.

இங்குதான் ரணில் விக்கிரமசிங்க தன்னை ஒரு பொது வேட்பாளராக இனங்காட்டுகிறார்.

இதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமன்றி, மொட்டுக்கட்சியின் ஆதரவையும் பெறுவது அவரின் நோக்கம்.

இங்குதான் ராஜபக்ஷ தரப்பு ரணிலின் தேர்தல் வியூகத்துக்குள் அடைபட்டுப் போயுள்ளது.

இதிலிருந்து அவர்கள் மீள்வார்களா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# ஊழல், மோசடிகளைத் தடுப்பதற்கு பல சட்டங்களை கொண்டுவருவோம்

## ஜே.வி.பி தலைவர் அநுர

*(மாத்தறை)*

ஊழல், மோசடிகளை தடுப்பதற்காக பல சட்டங்களை கொண்டு வருவோம் என ஜே.வி.பி தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மக்கள் எதிர்பார்ப்பு ஈடேறுகின்ற பாராளுமன்றமொன்றை நியமிக்க வேண்டும்.

நாங்கள் சட்டவாக்க அதிகாரம் உரியவகையில் பிரதிபலிக்கப்படுகின்ற பாராளுமன்றமாக மாற்றியமைப்போம்.

நிறைவேற்று அதிகாரம் மாற்றப்படவேண்டும். தனியார் ஒருவரிடம் மட்டற்ற அதிகாரம் குவிந்திருக்கின்றது. இருக்கின்ற சட்டத்திற்கு பொருள்கோடல் வழங்கி தண்டனை வழங்குவதே நீதிமன்றத்தின் கடமையாகும்.

ஊழல், மோசடி, விரயத்தை தடுப்பதற்கான பல சட்டங்களை நாங்கள் கொண்டுவருவோம். பாராளுமன்றத்தையும் நிறைவேற்றுத் துறையையும் நீதித்துறையையும் திட்டவட்டமான சமூக தேவைகளுக்காக பணியாற்றி வருகின்ற நிறுவனமாக மாற்றியமைக்க வேண்டும்.எமது பொருளாதாரத்தில் பாரிய மாற்றமொன்றை அடைய வேண்டும்.

பொருளாதார மாற்றத்திற்காக எமக்கு தொழில்சார் உழைப்பு அவசியமாகும் பாரா்ளுமன்ற உறுப்பினர்களின் டீசல் கொடுப்பனவாக ஒரு இலட்சம் ரூபாவை அதிகரித்துக்கொண்டார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே அந்த ஒரு இலட்சம் ரூபாவை பெற்றுக்கொள்ளவில்லை. எமது ஆட்சியில் வரிகளை கட்டாயமாக குறைப்போம் என அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

(ம-7)

## 17 வயது மாணவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

*(அவிசாவளை)*

அவிசாவளை, நாச்சிமலை நீரோடையின் கொனவல பகுதியில் நீரில் மூழ்கி 17 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளதாக அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கஹதுடுவ, பொல்கஸ்ஹோவிட்ட பலகம பிரதேசத்தை சேர்ந்த, ஹொரண வித்யாரத்ன வித்தியாலயத்தில் 12 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவன் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மாணவன் பாடசாலையின் வலைப்பந்தாட்ட அணி வீரர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மதியம் நண்பர் ஒருவர் வீட்டுக்கு வந்த நிலையில், 'அம்மா, நான் மீன் கொண்டு வருகிறேன்' என்று கூறிவிட்டு வீட்டை விட்டு சென்றதாக தாய் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

10 பேர் கொண்ட குழு ஒன்று கெப் வண்டியில் குளிப்பதற்குச் சென்றதாகவும், உயிரிழந்த பாடசாலை மாணவனும் மற்றுமொருவரும் திடீரென நீரில் குதித்து இருவரும் நீரில் மூழ்கி காணாமல் போனதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

## உள்நாட்டுத் துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் கைது

*(குருணாகல்)*

குருணாகல், அம்பன்பொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்பன்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பன்பொல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பன்பொல பகுதியில் வசிக்கும் 28 வயதுடைய இளைஞரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பன்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7)

## டிப்பர் மோதியதில் பெண் உயிரிழப்பு

*(கொழும்பு)*

ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரம்புக்கனை - கேகாலை பிரதான வீதியில் தளுக்கல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் (28) ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

ரம்புக்கனையிலிருந்து கேகாலை நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று வீதியில் பயணித்த வயோதிபப் பெண் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, படுகாயமடைந்த வயோதிபப் பெண் ரம்புக்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் ரம்புக்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 78 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவராவார்.

இதனையடுத்து, டிப்பர் வாகனத்தின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ரம்புக்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ஹெரோயினுடன் ஆட்டோ சாரதி கைது

*(கேகாலை)*

கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொலகொட பிரதேசத்தில் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று (29) காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான முச்சக்கர வண்டி ஒன்றை சோதனையிட்ட போது, அதன் சாரதியிடம் இருந்து 31 கிராம் 460 மில்லிகிராம் ஹெரோயின் பறிமுதல்செய்யப்பட்டுள்ளது.

வலகம தெற்கு, தெவலகம பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7)

## மோ.சைக்கிள் விபத்து பொலிஸ் அதிகாரி மரணம்

*(கொழும்பு)*

அவிசாவளை, தும்மோதர - புவக்பிட்டிய வீதியில் மிரிஸ்குடு வளைவுக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த வீதியில் சென்று கொண்டிருந்த கொள்கலன் பாரவூர்தி ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை (29) இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் மற்றைய அதிகாரி சிகிச்சைக்காக அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனி வக்ர பெயர்ச்சி ராசிபலன்கள்! (29.06.2024-15.11.2024)



மேஷம்

சதய நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்யப்போகும் சனிபகவான் மேஷ ராசிக்காரர்களுக்கு மிகுந்த தன லாபத்தைக் கொடுப்பார். பங்குச்சந்தை முதலீடுகள் மிகுந்த லாபத்தைக் கொடுக்கும். தங்கம், வெள்ளி வாங்கும் முயற்சிகள் பலிதமாகும்.

புதிய வண்டி, வாகனம் வாங்கும் யோகம் அதிகரிக்கும். எதிர்காலம் குறித்த திட்டமிடல்கள் மற்றும் முதலீடுகளைச் செய்ய ஏற்ற காலம் இது. பெண்களுக்கு இது மிகுந்த நல்ல காலமாகும். திருமண வயதில் உள்ளவர்களுக்குத் திருமணம் கூடிவரும். சனி தொடர்ந்து ராசியைப் பார்த்துக் கொண்டிருப்பதால் சின்னச் சின்ன ஆரோக்கியக் குறைபாடுகள் வந்து விலகும். மற்றபடி பொருளாதாரம், சமூக அந்தஸ்து ஆகியவற்றில் நல்ல நிலையே காணப்படுகிறது. குருபகவானும் குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். சுப நிகழ்ச்சிகள் களைகட்டும்.

பரிகாரம்

மேஷ ராசிக்காரர்கள் வெங்கடேஸ்வரப் பெருமாளை வழிபட்டு வந்தால் கஷ்டங்கள் விலகும். சுவாமி தரிசனம் செய்து வாருங்கள். நற்பலன்கள் மிகுதியாக இருக்கும்.



ரிஷபம்

ராசிக்கு 10ஆம் இடத்தில் நிகழும் இந்த சனி பகவானின் வக்கிர கதி, ரிஷப ராசிக்காரர்களுக்கு நற்பலன்களையே மிகுதியாக வழங்கும். மனதில் இருந்த குழப்பங்கள் விலகித் தெளிவு பிறக்கும். தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். இதுவரை அலுவலக ரீதியாக இருந்துவந்த குழப்பங்கள் விலகும். தெளிவு பிறக்கும். சிலருக்கு விரும்பிய இடமாற்றம் நிகழ வாய்ப்புண்டு. உங்களை மட்டம் தட்டிய அதிகாரி மாறிப்போவார். புதிய அதிகாரி உங்கள் திறமைக்கு ஏற்ப மரியாதை தருவார்.

பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு. குடும்பத்தில் இதுவரை இருந்துவந்த கருத்துமோதல்கள் விலகும். வீட்டில் உள்ளவர்கள் உங்களைப் புரிந்துகொள்வார்கள். சிலர் வீடு, மனை வாங்கும் முயற்சிகளை மேற்கொள்வீர்கள். அநாவசியச் செலவுகள் குறையும். ராசியிலேயே குருபகவான். சஞ்சரிப்பதால் உடல் நலனில் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். புதிய நகைகள் வாங்கும் யோகம் வாய்க்கும். வண்டி, வாகனங்கள் மாற்றவும் ஏற்ற காலமாகத் திகழும். குறிப்பாக ரோகிணி நட்சத்திரக்காரர்களுக்கு மிகுந்த நற்பலன்கள் உண்டாகும்.

பரிகாரம்

சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு சென்று வருவது நல்லது. ஒருமுறை வடைமாலை சாற்றி வழிபட்டு வந்தால். வாழ்வில் நல்ல திருப்பங்கள் உண்டாகும்.



மிதுனம்

இதுவரை இருந்துவந்த பிரச்சினைகள் விலகும். கடந்த 9 வருடங்களாக இழுபறியாக இருந்துவந்த சிக்கல் ஒன்றுக்குத் தீர்வு கிடைக்கும். பொருளாதார அளவில் நல்ல பலன்கள் உண்டாகும். எதிர்பார்த்த சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு. அலுவலகத்தில் உங்கள் கை ஓங்கும். எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். புதிய விடயங்களைக் கற்றுக்கொள்வீர்கள்.

வியாபாரத்திலும் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். பிரிந்திருந்த தம்பதி ஒன்று சேரும் வாய்ப்பு உண்டு. புதிய மனிதர்களின் சந்திப்பால் மனதுக்கு மகிழ்ச்சி கிடைக்கும். 10ஆம் வீட்டில் இருக்கும் ராகு பகவான் உங்களை பலப்படுத்திக்கொண்டிருக்கிறார். எனவே கடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். அலுவலகம் ரீதியாகவும் நற்பலன்கள் அதிகரிக்கும். என்றாலும் குடும்பத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது.

பரிகாரம்

ஆஞ்சநேயரை வழிபட்டு வர சங்கடங்கள் நீங்கி சந்தோஷம் அதிகரிக்கும்.



கடகம்

வக்கிர சனி சஞ்சாரம் கடக ராசிக்காரர்களுக்கு ஓரளவுக்கு நல்ல பலன்களைத் தந்தாலும், தேவையற்ற மன உளைச்சல் உண்டாகும். குறிப்பாக ஆயில்ய நட்சத்திரக்காரர்களுக்கு வீண் மனக்கவலைகள் வந்து போகும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் மதித்து நடப்பது நல்லது. தேவையில்லாத பழைய விடயங்களைப் பேசிப் பிரச்சினையைப் பெரிதாக்க வேண்டாம். குடும்பம் தொடர்பான பிரச்னைகளில் அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது.

வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டியதும் அவசியம். குறிப்பாக புனர்பூசம், பூசம் நட்சத்திரக்காரர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையின் உடல் நலனில் அக்கறை செலுத்துங்கள். பணவரவு போதுமான அளவுக்கு இருக்கும் என்றாலும் வீண் செலவுகளும் அதிகரிக்கும். எனவே செய்யும் செலவுகளை சுபச்செலவுகளாக மாற்றிக் கொள்ளப் பாருங்கள். குறுக்குவழிகளில் செல்வதை விட்டுவிட்டு, நேர்மையாக உழைக்க முயலுங்கள். புதிதாக அறிமுகமாகும் நபர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்கவேண்டாம்.

பரிகாரம்

சனிக்கிழமைகளில் சனி பகவானுக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபடுவதும் சதுர்த்தி திதியில் விநாயகப் பெருமான் அபிஷேகத்துக்குப் பால்வாங்கிக் கொடுப்பதும் நல்லது.



சிம்மம்

இந்த 140 நாள்களும் பல்வேறு மாற்றங்களைத் தரப் போகும் காலமாக அமையும். குடும்பத்தில் தேவையற்ற சச்சரவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே ஈகோ பிரச்சினைகளைத் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்திலும் அக்கறை அவசியம். நீண்ட காலமாகக் குழந்தை பாக்கியம் எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்குக் குழந்தை பாக்கியம் ஏற்பட வாய்ப்புண்டு. பொருளாதார நிலையில் மிகுந்த கவனம் தேவை. புதிய கடன்களை வாங்கும் முன் நன்கு ஆலோசித்துச் செயற்படுவது அவசியம்

வெளியூர், வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டாகும். என்றாலும் பயணத்தின் போது உடைமைகளை பத்திரமாகப் பார்த்துக்கொள்ள வேண்டியதும் அவசியம். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்தபடி இருக்கும் என்றாலும் போட்டிகளும் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது.

பரிகாரம்

ஆஞ்சநேயருக்கு வெண்ணெய்க் காப்பு சாத்தி வழிபட சகல நன்மைகளும் உண்டாகும்.



கன்னி

சனிபகவானின் இந்த வக்கிர சஞ்சாரம் உங்களுக்கு மிகுந்த நற்பலன்களை வழங்க இருக்கிறது. இதுவரை இழுபறியாக இருந்த பல பிரச்சினைகளுக்குத் தீர்வு உண்டாகும். பணம் பல வழிகளிலும் வரும். கடன்கள் கட்டுக்குள் இருக்கும். பழைய கடன் ஒன்றை அடைப்பீர்கள். புதிய வேலை, வியாபார முயற்சிகள் வெற்றியாகும். குடும்பத்தில் அன்பும் அமைதியும் நிறைந்திருக்கும். எதிரிகள் அடங்கிப் போவார்கள்.

வழக்குகளில் உங்களுக்கு சாதகமான தீர்ப்பு வரும். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு இந்தக் காலகட்டத்தில் திருமணம் நிச்சயமாகும். புதிய முயற்சிகள் வெற்றிபெறும். அலுவலக ரீதியாகவும் நல்ல பெயர்,புகழ் உண்டாகும். வேலையில் இருந்த சிக்கல்கள் தீரும். குருபகவானின் பார்வை ராசிக்குக் கிடைப்பதால், மலைபோல் வரும் பிரச்சினைகளும் பனிபோல் விலகும். பெண்களுக்கு இந்தக் காலகட்டம் மிகவும் நற்பலன்களையே கொடுக்கும்.

பரிகாரம்

சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு எள் தீபம் இட்டு வழிபட சகல நன்மைகளும் உண்டாகும்.


# சட்டத்தரணி நுவான் போகே வேட்பாளராகத் தெரிவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் போராட்டக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக சட்டத்தரணி நுவான் போபகே போட்டியிடவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பொது நூலகத்தில் நடைபெற்ற மக்கள் போராட்டக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மக்கள் போராட்டக் கூட்டணியின் பிரதிநிதி லஹிரு வீரசேகர இவ் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு மீதொட்டமுல்ல அனர்த்தத்தை ஏற்படுத்திய குப்பை மேட்டு விவகாரத்திற்கு எதிராக மக்கள் இயக்கத்தின் அமைப்பாளராக நுவான் போபகே செயற்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)



# நயினை அம்மனுக்கு ஆடிப்பூர விழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஆடிப்பூரத் திருவிழாவானது நேற்று திங்கட் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற உள்ளன.

எதிர்வரும் ஒகஸ்ட் 7 ஆம் திகதி புதன்கிழமை அம்பாளுக்கு 108 சங்காபிஷேகத்துடன் ஆடிப்பூர திருவிழா சிறப்பாக நடைபெறும் என ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேர்தலுக்கு...

அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்கவிடம் நாம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாதாரண தபால், பதிவுத் தபால், எழுது பொருட்கள், போக்குவரத்து, நிர்வாகக் கட்டணம் உள்ளிட்ட பல செலவினங்களுக்காக இந்த மதிப்பீடு செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்த மதிப்பீடு ஒரு முன்னறிவிப்பு மட்டுமே என்பதால், கோரப்பட்ட பணத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## இளம் குடும்பப்...

நேற்று முன்தினம் இரவு தொடக்கம் காணவில்லையென வீட்டார் மற்றும் அயலவர்கள், கிராமத்தவர்கள் இணைந்து தேடுதல் நடத்தியும் எங்கும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் நேற்றுக் காலை வீட்டுக் கிணற்றுக்குள் சடலமாக இருப்பதனை அவதானித்த குடும்பத்தினர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர் .

குறித்த பெண் திருமணமான பின்பு கணவருடைய வீட்டில் மாமன் மற்றும் மாமியுடன் வசித்து வந்ததாகவும் அவருக்கு 5 வயதுடைய ஒரு மகளும் உண்டு. குறித்த பெண்ணின் கணவர் புலம்பெயர் நாடு ஒன்றில் வசித்து வருகின்றார்.

சடலம் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

## இரண்டு பருத்தித்...

தடுப்புக் காவலில் தடுத்து வைத்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இளைஞனை தாக்கிய குற்றச்சாட்டில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல, மன்று அனுமதித்தது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் திணைக்கள ரீதியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் விசாரணைகள் முடிவடையும் வரையில் பணி இடைநீக்கம் செய்துள்ளார். (ம-7)

## கண்டாவளை...

கிளையில், கண்டாவளைப் பிரதேச செயலாளரினால் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட எழுமாறான சோதனையில் முறைகேடு இடம்பெற்றுள்ளமை அறியப்பட்டுள்ளது,

இந்த நிலையில், உடன் அமுலுக்கு வரும் வகையில் குறித்த சமுர்த்திக் கிளையின் அனைத்துச் செயற்பாடுகளும் முடக்கப்பட்டுப் பிரதேச செயலாளரினால் வங்கிக் கிளை பொறுப்பெடுக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, சமுர்த்தி திணைக்களத்தின் மாவட்டக் கணக்காய்வுப் பிரிவு, கண்டாவளைப் பிரதேச செயலக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, மாவட்டச் செயலக புலனாய்வு உத்தியோகத்தர்கள் என நான்கு குழுக்கள் நேற்று கணக்காய்வினை ஆரம்பித்துள்ளதாகப் பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த விடயம் தொடர்பில் கண்டாவளைப் பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரனிடம் வினவியபோது,

குறித்த வங்கிக் கிளையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட சோதனையில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேலும் ஆராய்ந்த பொழுது மேலும் பல முறைகேடுகள் அடையாளம் காணப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, குறித்த வங்கிக் கிளையின் செயற்பாடுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை மூடப்பட்டது. இதன் பின்னர் குறித்த விடயம் தொடர்பில் கணக்காய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்தக் கணக்காய்வு தொடர்பான விசாரணைகள் முடிவதற்கு மேலும் சில நாட்கள் தேவைப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும், குறித்த விடயத்தில் இது வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வங்கிக் கிளை உத்தியோகத்தர்கள் சிலரும், 3 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இம்முறைகேட்டுடன் தொடர்புபட்டவர்களாக அடையாளம் காணப்பட்டதாக பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

பயனாளிகளின் கையொப்பமின்றி வங்கி கணக்கிலிருந்து பணம் மீளப்பெற்றுக்கொண்டமை, கையொப்பங்கள், கைநாட்டுக்களை முறைகேடாகப் பயன்படுத்தி நிதி மோசடி செய்தமை, பயனாளிகளின் அனுமதி மற்றும் சம்மதமின்றி வங்கிக் கடன்களை பெற்றுள்ளமை உள்ளிட்ட பல் வேறு முறைகேடுகளும் மோசடிகளும் இடம்பெற்றுள்ளமை வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் இதுவரை அடையாளம் காணப்பட்ட விடயங்களின் அடிப்படையில் சுமார் 2 மில்லியன்களுக்கு மேல் முறைகேடு இடம்பெற்றுள்ளமையை உறுதி செய்யக்கூடியதாக உள்ளது எனவும் கண்டாவளைப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். அத்துடன், குறித்த விடயம் தொடர்பில் எழுந்துள்ள சந்தேகத்தின் அடிப்படையில் சில உத்தியோகத்தர்கள் விசாரணைகள் முடியும்வரை பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவரும் நிலையில், பயனாளிகளை சில உத்தியோகத்தர்கள் அச்சுறுத்தி வருவதாகவும், சமுர்த்தி பயனாளிகள் பட்டியலிலிருந்து நீக்கப்படுவீர்கள் என அச்சுறுத்துவதாகவும் பிரதேச செயலாளருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆயினும், குறித்த விடயம் தொடர்பில் யாரேனும் அச்சுறுத்த முற்பட்டாலோ அல்லது வேறு ஏதும் வழிகளில் அச்சுறுத்த முனைந்தாலோ தமக்கு தெரிவிக்குமாறும், வங்கிக் கொடுக்கல் வாங்கல் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் சந்தேகங்கள் அல்லது சாட்சியங்கள் இருப்பின் தனக்கு முறைப்பாடு செய்யுமாறும் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ம-7,100)

## பொலிஸில்...

தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சி ஒழுக்கத்தை மீறியுள்ளதாக தெரிவித்து நாமல் ராஜபக்ஷவிற்கு எதிராக அந்தக் கட்சியின் ஹோமாகமத் தொகுதி அமைப்பாளர் பந்துல குணவர்தன ஹோமாகம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷவினால் எவ்வித அறிவித்தலும் இன்றி ஹோமாகமவில் பொதுஜன பெரமுனவின் கூட்டத்தை ஏற்பாடு செய்தமைக்கு எதிராக பந்துல குணவர்தன இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். (ம-7)

மஹஜன சம்பத — திகதி 2024.07.29 — சீட்டிழுப்பு இலக்கம் 5549 — F 5 6 8 5 7 6
அத சம்பத — F 8 5 7 6 — சீட்டிழுப்பு இலக்கம் 124
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.07.29 — சீட்டிழுப்பு இலக்கம் - 1579 — Z 01 04 28 65 Z — Double Chance 01754

மெகா பவர் — திகதி 29/07/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1897 — A 24 30 54 74 78 — 95732

லக்கி 7 VIP — திகதி 2024.07.29 — சீட்டிழுப்பு இலக்கம் 0375 — X 0 8 1 6 7 6 X

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3791 — சீட்டிழுப்பு திகதி 29.07.2024 — X 11 50 59 63 — X 46867

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.07.29 — சீட்டிழுப்பு இலக்கம் 0858 — கும்பம் 04 33 36 58 கும்பம் — 28856 — 28

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பால் சம்பத — 29.07.2024 — வெற்றி வாரம் 257 — வர்ணம் ஊதா — N 5 5 4 3 5 0 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,561,964.00 — 55290

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2523 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 29.07.2024 — தினம் திங்கள் — 03 35 57 73 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 101,555,516.00

சனிதா — திகதி 2024.07.29 — வெற்றி வாரம் 4684 — வர்ணம் இளம் நீலம் — 04 07 49 62 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,719,683.60 — 35874

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4235 — வர்ணம் மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2024.07.29 — தினம் திங்கட்கிழமை — 23 27 40 51 கும்பம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,258,090.00 — 938906

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — I 36 33 35 65 68 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 535,909,293.80 — 1699 — பச்சை — 29.07.2024 திங்கள்

ஜயோதா Jayoda — திகதி 2024.07.29 — வெற்றி வாரம் 2046 — வர்ணம் செம்மஞ்சள் — 05 09 27 50 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,592,703.60

அத கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் : 2349 — சீட்டிழுப்பு திகதி : 2024.07.29 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,405,776.00 — 02 10 15 23 Y — 544844
DLB அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி தலைவர் அநுர தலைமையில் அகில இலங்கை தாதியர் மாநாடு

## தேர்தல் சட்டம் மீறப்பட்டதாகக் குற்றச்சாட்டு

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய அகில இலங்கைத் தாதியர் மாநாட்டில் அரச தாதியர்கள் சீருடையுடன் கலந்துகொண்டமை தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும் என பஃவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கும் வகையில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் கடிதமொன்றை சமர்ப்பித்துள்ளது.

இதன்படி, பொதுமக்களின் வரிப் பணத்தினால் வழங்கப்படும் சீருடையை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துவது நிறுவனங்களின் சட்டவிதிகளையும் தேர்தல் சட்டத்தையும் மீறும் செயலாகும் என குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கே ஆதரவு

## இராஜாங்க அமைச்சர் பிரமித்த

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கே ஆதரவளிக்கவுள்ளதாகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் அறிவித்துள்ளார். தனது எக்ஸ் தள பக்கத்தில் அவர் இதனைப் பதிவிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு முதிர்ச்சியற்ற தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக அதில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து, மிக முக்கியமான நேரத்தில் நாட்டைக் காப்பாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தான் தொடர்ந்தும் ஆதரவளிக்கவுள்ளதாக அவர் பதிவிட்டுள்ளார். (ம-7)

## தனித்துப்...

பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுக்குழு நேற்று கூடியபோதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில், நேற்று மாலை இந்த கூட்டம் இடம்பெற்றது.

அதற்கமைய, மொட்டு சின்னத்தின் கீழ் போட்டியிட விரும்பும் வேட்பாளர் தொடர்பில் ஆராய நேற்றைய கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்திற்கு அதிகாரத்தை வழங்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இதுவரை எவ்வித கருத்தினையும் வெளியிடவில்லை.

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பல அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பதாக ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், பொதுஜன பெரமுனவை சேர்ந்த சிலர் தமது கட்சியைச் சேர்ந்த ஒருவரையே வேட்பாளராக களமிறக்க வேண்டும் என வலியுறுத்தியதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அதன்படி பெரும்பான்மையான ஆதரவுடன் கட்சி சார்பில் ஒருவரை வேட்பாளராக தெரிவுசெய்ய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்கு எதிராக கட்சியை சேர்ந்த யாரேனும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக உடனடியான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெற்றியிடக்கூடிய ஒருவரை எதிர்வரும் சில நாட்களில் வேட்பாளராக அறிவிக்க கட்சி நடவடிக்கை எடுக்குமென அவர் கூறினார்.

ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு பெற்றுக் கொள்வது குறித்து அங்கு கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலில் தம்மை ஆதரிப்பீர்களா? இல்லையா? என்ற விடயத்தை உடனடியாக அறிவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவிடம் கோரியுள்ளார்.

பெரும்பாலான கட்சிகளின் ஆதரவை பெறுவதற்காக தாம் சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவதாக பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ரணில் விக்கிரமசிங்க எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தமிழர்...

பௌத்தர்களிற்கு உரிய பகுதிகளாக மாற்றுவதிலும் அரசாங்கம் ஈடுபடுகின்றது என தெரிவித்துள்ளது.

தொல்பொருள் திணைக்களம் உட்பட அரசஸ்தாபனங்கள், இராணுவம், பொலிஸார் இணைந்து மத சிறுபான்மையினத்தவர்களின் கலாச்சாரம், வழிபாடுகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளும் ஒரு ஒருங்கிணைந்த மூலோபாயத்தை முன்னெடுக்கின்றனர் எனவும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அவர்கள் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்குகிழக்கில் சிங்கள பௌத்த குடியேற்றங்களை ஊக்குவிக்கின்றனர், இது பெரும்பான்மையான தமிழ் முஸ்லீம் மக்களின் சொத்து மற்றும் மதஉரிமை ஆகியவற்றிற்கு தீங்குவிளைவிப்பதாக காணப்படுகின்றது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

வடக்குகிழக்கில் உள்ள இந்துக் கோவில்களில் அதிகாரிகள், பௌத்த மதகுருமாருடன் இணைந்து இந்து மத கடவுள்களின் விக்கிரகங்களை சேதப்படுத்தியுள்ளனர் அல்லது அகற்றியுள்ளனர், வழிபாட்டில் ஈடுபடுபவர்களை அச்சுறுத்தியுள்ளனர், தாக்கியுள்ளனர், கைதுசெய்துள்ளனர், அவர்களுக்கு வழிபாட்டிற்கான அனுமதியை மறுத்துள்ளனர் என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்,நில அபகரிப்பின் மூலம் தமிழ் முஸ்லீம்களின் சொத்துக்களை அவர்கள் இலக்குவைத்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## சரவணபவா...

நமசிவாயம் சரவணபவா அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. யாழ்விருது வழங்குவது தொடர்பில், நேற்று யாழ்.மாநகர சபையில் சைவசமய விவகாரக் குழுவின் மகாசபை யாழ்.மாநகர சபை ஆணையாளரும் சைவசமய விவகாரக்குழுவின் தலைவருமான ச.கிருஷ்னேந்திரன் தலைமையில் கூடியது.

இதன்போது 2024ஆம் ஆண்டுக்கான யாழ்விருதை யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் மருத்துவர் நமசிவாயம் சரவணபவா அவர்களுக்கு வழங்குவது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்விருதானது நல்லைக்குமரன் மலர் வெளியீட்டின்போது வழங்கி வைக்கப்படும். (ம-7)

## சுழிபுரத்தில்...

இச்சம்பவத்தில் 28 வயதான ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் அநுராதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர். இவர் கடந்த ஆண்டு பொன்னாலை - சுழிபுரம் மேற்கில் திருமணம் செய்து அங்கு வசித்து வந்துள்ளார். இவருக்கு போதைவஸ்து பழக்கம் உள்ளது.

அந்தவகையில் ஏற்கனவே ஒரு தடவை இவரை போதைவஸ்து பாவனை செய்ய வேண்டாம் என தடுத்தவேளை குழாய் மின்குமிழை உட்கொண்டுள்ளார்.

இந்நிலையில் போதைப்பொருள் பாவிக்க வேண்டாம் என அறிவுறுத்தி தடுக்கப்பட்ட நிலையில் நேற்று வீட்டுக்கு அருகேயுள்ள மரம் ஒன்றில் தூக்கிட்டுள்ளார். தூக்கிட்ட கயிறு அறுந்து கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

வங்கி மீதி வசதி (Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(182)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0885)
076 825 7716 (ஆகாஸ்)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College 49A, Chapel Street,Jaffna.
(C-0884)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்
சகல நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 1300/= French - 1990/=
Canada - 2400/= Germany - 1990/=
Australia - 2300/= USA - 2400/=
மற்ற நாடுகளுக்கும் விசேட சலுகை (204)
திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna. | 208, Galle Road, colombo-6.
077 755 4528

பணிப்பெண் தேவை
கொக்குவில் பகுதியில் வீட்டு வேலை செய்ய பணிப்பெண் தேவை. 35 - 50 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு :
077 949 0903
(1579)

அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
(C-0884)
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241

WIN REPAIR
உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம்.
(1582)
தொடர்புகளுக்கு: 076 834 6136

விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தித் தரப்படும்.
1%
● Visit visa
● Student visa
● Fixed & saving
● லட்சத்திற்கு 1000 மட்டுமே
(187)
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
075 033 6759

V2 VISA SERVICES கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0884)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.